891

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா



ஸ்ரீ கண்ணன் (வில்லூர்)

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம்	பக்கம்
1. ஸம்பாதகரின் குறிப்புக்கள்	186
2. ஸ்ரீ ஆளவந்தார் [ஸ்ரீ. உப. தி. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, ப்ரின்ஸிபால், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]	190
3. ஸ்ரீமச்சாரீரகஸுப்ரபாதம் [ஸ்ரீ. உப. வித்வான், சின்னுமு சி. ர. ஸ்ரீநிவாஸபாட்ராசார்ய ஸ்வாமி, திருக்குடந்தை.]	193
4. நூற்றெட்டுத் திருப்பதிகள்	197
5. ஹிந்து நாகரிகமும், இன்றைய ஹிந்துவின் நிலையும் [ஸ்ரீ. சிலுக்கூர், சுந்தராசார்யஸ்வாமி, ஹைதாராபாத்.]	199
6. ஸ்ரீ விசிஷ்டாத்வைதாவதாரம் [ஸ்ரீ. உப, கோடியாலம், துரைஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, மதராஸ்]	202
7. பகவதாராதனம் [ஸ்ரீ. உப. புரிசை, நடாதூர், கிருஷ்ணமாசார்யஸ்வாமி, சிரோமணி. திருவுள்ளூர்.]	205
8. என்னுடைய இன்னமுது [ஸ்ரீ. உப. அத்தி. நரஸிம்ஹாசார்யஸ்வாமி, சிரோமணி, அர்ச்சகம், ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி தேவஸ்தானம், திருவுள்ளூர்.]	207
9. செய்தி	209

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam, Sri Ahobilamutt, at .Sri Malola Press, 30. Panagal Street, Tiruvallur. Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T. Sri Ahobilamutt Sanskrit College, Madurantakam.

ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 16 } ஹேவிளம்பி ௵ ஆவணி ௴ { ஸஞ்சிகை 8

‘அஹோபிலே காருடஶைலமத்யே
க்ருபாவஶாத் கல்பிதஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ॥’

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஶ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஶ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த ‘ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா’ என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த ‘ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா’ என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

'न कश्चिन्नापराध्यति' என்பது விபவாவதாரத்தில் இவ்வுலகில் அவதரித்த ஸீதாப்பிராட்டியின் கொள்கை. இவ்வுலகில் ஜனித்த எவரும் எதாவதொரு வகையில் பிழை செய்யாமல் இருக்கமுடியாது என்பதுதான் இதன் கருத்து. எவரும் எவ்விதமாயினும் பிழை செய்யாமல் இருக்கவேண்டியதுதான் நியாயமான மார்க்கம். அப்படியிருக்க எதாவதொரு வகையில் எவரும் பிழை செய்வரென்றால், நியாய விரோத விஷயமாகத் தோன்றுகிறதல்லவா? உண்மைதான். இதனால்தான் நமது பிழையின் மூலமாக நமக்கு ஏற்படும் பாபங்களைப் போக்கடித்துக்கொள்ள ஒவ்வொரு தினமும் நாம் அபராத க்ஷாபணம் செய்துகொள்கிறோம். புத்திக்குப் புலப்பட்டோ, புலப்படாமலேயோ நான் செய்யும் அபராதங்களைப் பொறுத்து என்னை ஆட்கொள்ளவேண்டும் என்று நாம் பகவானைப் பிரார்த்திக்கிறோம். உண்மையான உணர்ச்சியினால் நாம் பரிசுத்தமாகிறோம் என்பது உலகில் எவ்விடத்திலும் எம்மதத்திலும் ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கையாகும்.

இவ்விதம் நமது முயற்சியில்லாமலேயே நாம் பிழை செய்யும்படி நேரிடுகிறதென்ற காரணத்தைக் கூறி, பிழை செய்வதையே ஒரு கொள்கையாகக் கொள்வது ஸரியாகுமா? தவறி விழுந்தால் தலையில் காயம் படுகிறதென்ற காரணத்தைக் கூறி, தானாகவே தலையில் காயம் செய்துகொள்ளும் தலைவன் ஒரு ஸமூஹத்தில் இருந்தால், அத்தலைவனை மதியூகி என்றுதான் கூறவேண்டும்.

பிறருக்கு உபத்ரவமிழைப்பதே பெரிய பிழை என்பதை அறிவுலகில் உள்ள எவரும் ஒப்புக்கொள்வர். அப்படியிருக்க உபத்ரவம் இழைப்பதே தனது கொள்கை என்று ஒருவன் எண்ணியும், சொல்லியும், செயலால் நிரூபித்தும் வருவானேயாகில் அவன் மனோநிலையை வர்ணிக்க அகராதியிலதான் தகுந்த வார்த்தையைத் தேடிப் பிடிக்கவேண்டும்.

சூழ்நிலையின் காரணமாக ஸாதுவும் அஸாதுவாக நேரிடுகிறது. இந்நிலையிலும் ஸாத்விக ஸ்வபாவத்தை இழக்காமல் இருப்பவன்தான் பெரியவன். ஆயினும் ஸாதுவின் உயிருக்கே உலைவைக்கும் கார்யத்தை மற்றவன் செய்யுங்காலத்தில், அவனிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முயலுந் தருணத்தில், எதிர்பாராதவிதத்தில் துஷ்டனுக்கும் தண்டனை ஏற்படுகிறதென்றால், ஸாதுவின் க்ருத்யமிது என்று கூறி அவன்பேரில் பழி சுமத்துவதில் பலனில்லை. இம்மாதிரியான அஸந்தர்ப்பங்கள் ஏற்படாவண்ணம், ஸமூஹமும், ஸமூஹத்தை ஸுகித்திருக்கச்செய்யும் அரசாங்கமும் கவனித்துக்கொள்ள வேண்டியதுதான் அவர்களுடைய முதற்கடமையாகும்.

நமது ஸமூஹத்தில் ஸமீபகாலத்தில், பரஸ்பரபேதங்களும். ஒருவரது கொள்கைகளை மற்றொருவர் மீது திணிக்க முயற்சித்தலும் மிகவும் மலிந்து கிடக்கின்றன. விளைபொருள்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டாலும், அஸூயைக்கும், ஆத்திரத்துக்கும் பஞ்சமே கிடையாது. சிலருடைய கஷ்டமே தனக்கு ஸுகமென்று கருதும் கொள்கையையுடையவர்கள் மலிந்து கிடக்கிறார்கள் என்பது பொய்யல்ல.

இக்கொள்கையை அவர்களுடைய அகத்தோற்றங்களிலிருந்து கண்டுபிடிப்பது ஒருஸமயம் சிரமமாக இருக்கலாம் என்ற எண்ணத்தால் போலும் புறத்தோற்றங்களிலிருந்தே அறிந்துகொள்ளும்படியாக அமைத்துக்கொண்டிருக்கிறார்கள் சிலர்கள்.

கீர்த்திக்கும், பரிசுத்தத்துக்கும் உவமையாக வெண்மையை உதாஹரிப்பார்கள் கவிஞர்கள். வெண்மைக்கு நேர் மாறானது கருமை. ஆகவே நேர்மைக்கும், புகழுக்கும் எதிரிடையாகத் தோன்றவேணும் என்ற ஆசையினால் கருப்பு அங்கியைப் பற்றியிருக்கிறார்கள் போலும்.

ஸ்ரீ:பதியான கிருஷ்ணபரமாத்மா நீலமேகச்யாமளவர்ணன் என்று நாம் கேட்டிருக்கிறோம். ஆனால் இவனை நம்பாதவர்கள் அணிவதன்றோ கருப்பு அங்கி. வர்ணங்களில் நீலம் என்பது ஒன்று. கருநீலி என்பது வேறொன்று. கருப்பு என்பது மற்றொன்று. மேகத்தை நீலமேகம் என்று சொல்கிறோம். கரிக்கட்டையையும் கருப்பு என்று சொல்லுகிறோம். ஸாளக்ராமசிலையும் கருப்புதான். ஆனால் ஒவ்வொன்றின் நிறத்திலும் பேதம் இருப்பது உண்மை. யோசித்துப் பார்த்தால் நன்கு உணரமுடியும். ஆதலால் கருப்பு அங்கியை இம்மாதிரி உவமையைக்காட்டி உத்க்ருஷ்டமானதாகக் கூறமுடியுமா?

கருஞ்சட்டையே கருவி என்றால், இக்கருவியைக்கொண்டவரின் கருத்தை அறிவதுதானா கடினம். ஸமூஹத்தில் கரி பூசுவதுதான் முதற்கொள்கையும், முக்கியக் கொள்கையும் இவர்களுக்கு.

அக்ஷரம் என்பது எழுத்து. அக்ஷரம் என்றால் அழியாதது. அழியாதது கடவுள். அக்ஷரமே கடவுள். ஒலிவடிவமே பகவான். அனாதியான அக்ஷரச் சப்ததத்வமேதான் பகவான் என்றும் பலர் கூறுவார்கள். அம்மாதிரியான அக்ஷரங்களை அழிப்பது முடியாது. அழிக்க முயற்சிப்பதும் மடமை என்று அறிவாளிகள் உணர்வர். குறிப்பிட்ட இடத்தில் சில எழுத்துக்களை அழித்துவிட்டால் உலகிலேயேயோ, அவைகளின் கருத்துக்களையோ மாற்றிவிட்டதாக நினைக்கலாமா! அறிவு வளர்ச்சி பெறாத குழந்தைகள் ஒன்றுக்கொன்று விளையாட்டில் சண்டை பிடித்துக்கொள்வதை நாம் பார்த்ததுண்டு. ஒன்று மன்றொன்றைப் பார்த்து, 'உன் பெயரை எழுதி அதை அடிக்கிறேன் பார்' என்று பயமுறுத்தும். மற்றொன்று தனக்கு ஒரு பெரிய அநீதி விளைவிக்கப்படுகிறதாக எண்ணி அழும்; சண்டையிடும். இவைகள் குழந்தைகளின் காரியங்கள். அறிவிற்சிறந்த பெரியவர்களின் செய்கையல்ல. வயதுவளர்ச்சிக்கும் அறிவுவளர்ச்சிக்கும் ஸம்பந்தம் உண்டு. ஒன்றுடன் மற்றொன்றும் வளர்வது என்பது இயற்கை. ஆயினும் இயற்கைக்கு மாறுபாடுடன் சில காரியங்கள் நடைபெறுவதுபோல் வயதுவளர்ச்சிக்குத்தகுந்தபடி, அறிவுவளர்ச்சி காணப்படுவதில்லை. குழந்தைகளின் மனோதத்வ சாஸ்த்ரத்தை ஆராயும் நிபுணர்கள் நுண்ணறிவுச்சோதனைகள் மூலமாக (Intelligence tests) பிறந்த வயதையும், அறிவுத்திறனுக்குத் தக்க வயதையும் தெரிந்துகொள்ளுகிறார்கள். ஒரு எட்டு வயதுக்குழந்தை 10 அல்லது 12 வயது குழந்தையின் அறிவுத்திறனைப் பெற்றிருக்கலாம். அதேபோல் 10 அல்லது 12 வயது பையன் ஒருவன் 5 அல்லது 6 வயது குழந்தையின் அறிவுத்திறனுடனுமிருக்கலாம். இவைகளை மேனாட்டு நிபுணர்கள் பரிசோதனைகள் மூலம் தெரிந்துகொண்டு, பாலர்களுக்கு கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கு, போதனாமுறைப் பயிற்சியில் உபயோகிக்கிறார்கள். இது பாலர்கள் விஷயங்களில் ஸம்பவிப்பதுபோல், வயது முதிர்ந்தவர்கள் விஷயங்களிலும் ஸம்பவிக்கிறது. நாம் ஏதாவது பிழை செய்தால், பெரியோர்கள் நம்மைக் கடிந்துகொண்டு, 'இது என்ன சிறுபிள்ளைத்தனமான காரியம்' என்று கூறுகிறார்கள் இல்லையா? ஆனால் இம்மாதிரி பிழைகள் செய்பவர்கள், வயதில் பெரியவர்களானாலும் அறிவிற் சிறுபிள்ளைகள் என்பதை ஒப்புக்கொள்ளத்தானே வேண்டும். சில சிறு

பிள்ளைகள் பெரியவர்களைப்போல் உண்ணவும், உடுக்கவும் ஆசைப்படவில்லையா? இதேபோல் அதுவும்.

இம்மாதிரியான (உகை) சூழ்நிலையில் நாம் வசிக்கும்படியான காலம் ஏற்பட்டிருப்பதை நினைத்து வருந்துவதில்பட்டில் பலனில்லை. சூழ்நிலையை மாற்றியமைக்கவும் நாம் முயற்சித்தலவசியம். நமக்குப் போதிய அறிவும், சக்தியும் உண்டு. ஆனால் ஆற்றல்தான் அவசியம்.

நாம் முன் கூறியதுபோல் பிழை செய்வதையே பிழைப்பாக வைத்துக்கொண்டிருப்பதை நாம் அநுமதிக்கலாகாது. ஒருவனுடைய சுதந்திரம் மற்றவனை ஹிம்ஸிக்கவும், அழிக்கவும், உபயோகிக்கப்படுமாயின் அது சுதந்திரம் அல்ல. அதையனுமதிப்பதும் நாகரிக உலகுக்கு அழகல்ல. ஆகவே ஸாத்விக முறையில் ஸமூஹத்துக்கு எடுத்துரைத்து ஸமூஹத்தை நல்வழிக்குக் கொண்டுவர முயற்சிப்பது ஒவ்வொருவருடைய கடமையாகும்.

ஸமூஹம் என்பது ஒரு சிறிய குழந்தை போன்றது. நல்லுரைகளை போதித்து குழந்தையை அறிவிற் சிறந்தவனாக்குவதுபோல், ஸமூஹத்துக்கும் உயர்ந்த கருத்துக்களை எடுத்துரைக்க வேண்டும் ஸமூஹம் தானாகவே நல்வழிக்கு வரும்.

ஸமூஹத்தில் நன்மையைப் பயக்கும் கருவிகள் பல மறைந்து கிடக்கின்றன. அழுக்கு அடைந்த வஸ்து மெருகு கொடுத்தால் பளபளப்பை அடைகிறது. அதேபோல்தான் ஸமூஹமும். உலகில் உயர்ந்த ரத்னங்களையும், ஸாமான்ய வஸ்துக்களையும், அழுக்கடைந்த உபயோகமுள்ளதும், உபயோகமில்லாததுமான பற்பல வஸ்துக்களைக் காண்பதுபோல், ஸமூஹத்திலும் பற்பல வேற்றுமைகளுடன் கூடிய ஜனங்களைக் காண்கிறோம். நம்மைக் காட்டிலும் பன்மடங்கு உயர்ந்த அறிவும், ஆற்றலும் உடையவர்கள் இருக்கிறார்கள். நம்மை விட தாழ்ந்த அறிவுடையவர்களும் இருக்கிறார்கள். ஆகவே ஒவ்வொருவனும் தன்து கடமையைச் செய்து ஸமூஹத்தை முன்னேற்றத்துக்குக் கொண்டுவரவேண்டியது அவசியந்தானே.

* * * * * * *

குழப்பத்தைத் தரக்கூடிய வெளித்தோற்றமுடையவர்களிடமும், ஸமூஹத்துக்கு அமைதியைத் தரக்கூடிய கடவுள்பக்தி குடிகொண்டிருப்பதைக் கண்டு ஸந்தோஷிக்கிறோம். இம்மாதிரி கடவுள்பக்தி, மதபக்தி இவர்களுக்கு இல்லை; சூழ்நிலை காரணமாக ஏற்பட்டிருக்கிறது என்று ஒரு சிலர் வாதுபுரியலாம். இதை நாம் ஒப்புக்கொள்வதற்கில்லை. பகவத் ச்ருஷ்டியில் ஒவ்வொருவரிடமும் கடவுள் பக்தியும், ஸமூஹ உணர்ச்சியும் உண்டு. ஆனால் தத்கால சூழ்நிலை, அவனுடைய முற்கால சூழ்நிலை இவைகளின் காரணமாக அம்மாதிரி உயர்ந்த குணங்கள் மறைபட்டுக்கிடக்கும்படி நேரிடலாம். இம்மாதிரி இருக்கும் பகவத்பக்தி, மத உணர்ச்சி இவைகள்தான் சூழ்நிலைகாரணமாக சிலரிடம் மறைவதும், மறுபடியும் தோன்றுவதும் ஸஹஜமாகிவிட்டது.

ஸமீபத்தில் கேரளராஜ்யத்தில் நில சீர்திருத்தங்களைப் பற்றி ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அதிகாரத்தில் உள்ளவர்கள் உயர்ந்தபக்ஷம் ஒரு குடும்பம் எவ்வளவு விஸ்தீர்ணமுள்ள நிலங்களை வைத்திருக்கலாம் என்பதைப் பற்றி பல யோசனைகளைச் செய்து வருகிறார்கள். குடும்ப நிலைக்குத் தக்கபடியும், இடத்துக்குத் தக்கபடியும் மாறுபாடுகள் செய்வார்கள் எனத் தோன்றுகிறது. இம்மாதிரி விஷயங்களில் ஸமூஹத்தில் உள்ளவர்களுக்கு, ஒவ்வொருவருக்கும், அபிப்ராய பேதங்கள் இருக்கலாம். அதைச் சொல்லவும் முன் வரலாம். ஆயினும் பொருளாதாரத் துறையில் நிபுணர்களுக்கு இம்மாதிரி விஷயங்களை விட்டு, ஆன்மீகத்துறை ஸம்பந்தப்பட்டதை பட்டில் நாம் இங்கு கூற விருப்புகிறோம்.

உலகில் வாழ்ந்து வரும் வரை சரீரத்தைக் காப்பாற்றினால்தான் இதன் மூலம் செய்யக் கூடிய தர்மத்தைச் செய்யமுடியும். 'शरीरमाद्यं खलु धर्मसाधनम्' சரீரம் தர்மத்தைச் செய்வதற்கு முதல் ஸாதனமாகிறது என்பதால்

உசிதமான அளவில் சரீரத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அவசியம் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டிருக்கிறது. அதனால் ஆந்மீகத்துறையில் ஈடுபடும் மதஸ்தாபனங்களுக்கும், தேவாலயங்களுக்கும் பொருள் சேகரித்தல் அவசியமில்லை எனக்கூறுபவர்களின் அறிவுத்திறனை நுண்ணறிவுச் சோதனைக்குத்தான் உட்படுத்தவேண்டும் என்று தோன்றுகிறது.

சோள ராஜ்யத்தில், முன் கூறியபடி நிலச் சீர்திருத்தங்களில் உச்ச வரம்பு நிர்ணய விஷயத்தில் ஒரு நல்ல யோசனை கையாளப்பட்டிருக்கிறது.

தேவாலயங்களுக்கும், மதஸ்தாபனங்களுக்கும் சொந்தமான நிலங்களை உச்சவரம்புக்கு உட்படுத்தப்போவதில்லை எனத் தீர்மானித்திருக்கிறார்கள். இந்த தீர்மானம் மிகவும் பாராட்டத்தக்கதாகிறது. இதேபோல் தர்மஸ்தாபனங்களுக்குச் சொந்தமான நிலங்களையும் இந்த உச்சவரம்பு நிர்ணயத்திலிருந்து விலக்கி இருப்பார்களென்றே எண்ணுகிறோம். இது சரியான ஏற்பாடுதான்.

ஒரு குறிப்பிட்ட குடும்பமே ஏராளமான பூஸ்திதியை அனுபவித்துவருகிறதென்றும், அதைத்தவிர்த்து பல குடும்பங்கள் லாபத்தையடையவேண்டும் என்ற நோக்கத்தைக்கொண்டதுதான் இந்த உச்சவரம்பு நிர்ணயம். இந்த நோக்கத்துக்கு மிகவும் அநுகூலமான அம்சங்கள் தேவாலய, மதஸ்தாபன சொத்துக்களில் காணப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட குடும்பத்தின் நலனுக்கு உபயோகிக்கப்படுவதில்லை இம்மாதிரியான ஸ்தாபனங்களின் சொத்துக்கள். ஸமூஹத்தின் பொதுநலனுக்காகவே உபயோகிக்கப்பட்டுவருகிறது. ஆகவே எந்த சீர்திருத்தத்தை புதிதாகச் செய்ய, நவீனகாலத்தவர்கள் முயற்சிக்கிறார்களோ, அந்த சீர்திருத்தம் ஏற்கனவே நமது முன்னோர்களால் ஆரம்பிக்கப்பட்டு, பரம்பரையாக அநுஷ்டானத்தில் கொண்டுவரப்பட்டதுதான். இம்மாதிரி சேர்ந்ததுதானே தேவாலயங்களுடையவும், மதஸ்தாபனங்களுடையவும் சொத்துக்கள் முற்காலத்தைவிட, நவீன காலத்து சூழ்நிலையில் இம்மாதிரியான ஸ்தாபனங்கள் செய்யவேண்டிய கார்யங்கள் அதிகரித்துள்ளன என்பதை நாம் கவனிக்கவேண்டும். இம்மாதிரி கார்யங்களைச் செய்வதென்றால் ஏராளமான பொருள் இல்லாமல் இக்காலத்தில் என்ன செய்ய முடியும்.

தர்மமே தலைகாக்கும், பகவத் கைங்கர்யமே என்னைக்காப்பாற்றும், பொருள் சேகரித்தல் எனக்குத்தேவையில்லை என்று வைராக்யத்துடன், ஸ்வாமி ஸ்ரீதேசிகன் காலத்தில் கூற முடிந்தது. அப்பொழுதுகூட அந்த மஹானால்தான் கூறமுடிந்தது.

அதனால் தக்காலம் தர்மகார்யங்களைச் செய்யவும், மதப்பற்றுடன் ஸமூஹம் முன்னேறி வாழ வழிசெய்யவும், தர்மஸ்தாபனங்களுக்கு ஏராளமான த்ரவ்யம் தேவையாகிறது. இந்த த்ரவ்யமும் ஸமூஹத்திலேயே புழக்கத்தில் வந்துகொண்டிருக்கிறது. இவைகளையும், இம்மாதிரி இன்னும் சில காரணங்களையும் மனத்திற்கொண்டு நில உச்சவரம்பு நிர்ணயத்தை, தேவாலய — மதஸ்தாபன சொத்துக்கள் விஷயத்தில் புகுத்தாதது மிகவும் போற்றத் தக்க விஷயமாகும். இது மற்றைய ராஜ்யங்களில் ஏற்படாவிருக்கும் உச்சவரம்புநிர்ணயத்திற்கு உரிய காலத்தில் சிறந்த வழிகாட்டியாகவும் இருக்கும் என நம்புகிறோம்.

ஸ்ரீ:

ஸ்ரீ ஆளவந்தார்

“नमो नमो यामुनाय यामुनाय नमो नमः”

“श्रुतिन्यायापेतं जगति विततं मोहनमिदं तमो येनापास्तं स हि विजयते यामुनमुनिः”

ஸ்ரீ ஆளவந்தார் என்று ப்ரஸித்தி பெற்ற ஸ்ரீயாமுனாசார்யர் காட்டுமன்னார்கோவில் எனக் கூறப்படுகிற வீரநாராயணபுரத்தில் கல்யப்தம் 4018ல், தாதுஸ்ரீ ஆடிமீ உத்திராட நக்ஷத்திரத்தில் அவதரித்தார். **'नाथो पज्ञं प्रवृत्त'** என்று ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாயத்தைப் பெருமையாகச் சொல்லிக்கொள்வதற்குக் காரணம் ஸ்ரீமந்நாதமுனிகள். இந்தமஹானின் புத்ரர் ஈச்வரமுனி. இவருடைய புத்ரர் தான் யமுனைத்துறைவர் என்ற ஸ்ரீ ஆளவந்தார்.

யமுனைத்துறவைருக்கு ஸ்ரீ ஆளவந்தார் எனப் பெயர் ஏற்பட்டதற்குக் காரணமே இம்மஹானின் பெருமையை எடுத்துக்காட்டுகிறது. யமுனைத்துறைவர் சாஸ்த்ராப்யாஸம் செய்துகொண்டிருக்கும் ஸமயத்தில், அந்த தேசத்து அரசஸபையில் ஆக்கியாழ்வான் என்ற மஹாகர்விஷ்டராகிய ஆஸ்தான வித்வான் வஸித்துவந்தார். இவருக்கு நாட்டிலுள்ள எல்லா வித்வான்களும் கப்பங்கட்டும்படி நிர்பந்திக்கப்பட்டனர். ஸ்ரீ ஆளவந்தாரின் ஆசார்யராகிய மஹாபாஷ்யபட்டருக்கும் இந்நிலைமை ஏற்பட்டது. அதுஸமயம் ஸ்ரீ ஆளவந்தார் ஆக்கியாழ்வானின் சாஸனத்தைக் கிழித்தெறிந்துவிட்டு அத்தூதனிடம் **'न वयं कवयस्तु केवलं न वयं केवलतन्त्रपारगाः । अपि तु प्रतिवादिवारणप्रकटाटोपविपाटनक्षमाः ॥'** நாங்கள் கவிகள் மாத்ரம் அல்ல. ஸாமான்யமாகஶாஸ்திரங்களை கரைகண்டவர்கள் மட்டில் அல்ல. ஆனால் ப்ரதிவாதிகளின்கர்வமடங்கிய (சொல்) அம்புகளைத் தடுக்கவும் ஸாமர்த்யம் உடையவர்கள் என்று கருத்துள்ள குறிப்பெழுதியனுப்பினார். ஆஸ்தானவித்வானும் ராஜாவுக்குத் தெரிவிக்க ராஜாவும் யமுனைத்துறைவனை ராஜஸபைக்கு வரும்படி சாஸனம் அனுப்பினான். யமுனைத்துறைவன் இந்த சாஸனத்தையும் கிழித்தெரிந்தார். இதைக் கேட்ட அரசன் சினங்கொண்டபொழுது அரசியால் ஸமாதானம் செய்யப்பட்டான். மஹான்களை மரியாதையுடன் ஆஹ்வானம் செய்யவேண்டும் என்று அவள் எடுத்துக் கூற, அரசனும் ஸம்மதித்துப் பல்லக்கு முதலிய மர்யாதைகளை அனுப்பிவரவேண்டுமென்றுபிரார்த்தித்தான். யமுனைத்துறைவரும் அந்தத் தண்டிகையில் ஏறி ராஜஸபைக்கு வந்தார். ராஜஸபையில் மத்யஸ்தர்கள் முன்னிலையில் ஆக்கியாழ்வானுடன் வாதம் புரிய நேர்ந்தது.

முன் ஒரு ஸமயம் இந்த அரசனுக்கும் அரசிக்கும் சைவ, வைஷ்ணவ ஸம்பந்தமாக ஒரு விவாதம் ஏற்பட்டு அந்த இரு சமயங்களில் உயர்ந்தது எது என்று ஸ்தாபிக்கப்படாமலேயே இருந்துவந்தது. அரசன் சைவபக்ஷபாதியாகவும், அரசி வைஷ்ணவியாகவும் இருந்தனர். இதுஸமயம் யமுனைத்துறைவரின் தேஜஸ்ஸினால் ஆகர்ஷிக்கப்பட்ட மனதையுடைய அரசி, தங்கள் விவாதத்தைத் தீர்த்துக்கொள்ள இதுவே தருணம் என்றும் (யமுனைத்துறைவரின் ஜயமே தன் கக்ஷி ஜயமென எண்ணி) ஸ்ரீயமுனைத்துறைவர்– ஆக்கியாழ்வான் இருவருள் ஜயித்தவருக்குப் பாதி ராஜ்யம் கொடுப்பதாகவும், தோற்றவர் அடிமையாவதென்றும் அரசனுடன் முடிவு செய்துகொண்டாள்.

ஆக்கியாழ்வானும் யமுனைத்துறைவருடைய சாஸ்த்ர ஸாமர்த்தியத்திற்குப் பயந்து சிறுபிராயமுடையவராதலால் லௌகிக அநுபவம் போதாது என்று எண்ணி, இம்மாதிரி விஷயத்தில் ஸுலபமாய் ஏமாற்றிவிடலாமென்று நினைத்து, 'உம்முடைய ஸத்வாதத்தை அஸத்வாதமாகவும், அஸத்வாதத்தை ஸத்வாதமாகவும் செய்வேன்' என்று கூறினான்.

யமுனைத்துறைவர் இதைக் கேட்டு **'राजायं सार्वभौमः– राजपत्नी पतिव्रता– त्वन्माता न वन्ध्या–** (அரசன்ஸார்வபௌமன்– ராஜபத்நீபதிவ்ரதை உன் தாய் மலடி அல்ல–) என்ற மூன்று வாக்யங்களைக் கூறவே இவ்வாதங்களை மறுக்கமுடியாமல் திணறினார். ஆஸ்தான பண்டிதர், இதன் பின்னர் யமுனைத்துறைவரே ஶாஸ்த்ரீயமுறையில் இவைகளுக்கு ஸமாதானம் கூற

வேண்டிவந்தது. அரசாட்சி காலத்தில் அரசன் சாஸ்த்ரீயமுறைக்கு முரணாக நடக்கும் ஸமயங்களையும், விவாஹகாலத்துக்கு முன்பு கன்னிகைகள் சில தேவதைகளால் க்ரமேண காப்பற்றப்படுவதையும், (ஒரு மரம் தோப்பாகாதது போல்) ஒரு குழந்தையைப் பெற்ற ஸ்த்ரீ மலடிக்குஸமானமென்பதையும் எடுத்துக் காண்பித்து தன்லௌகிகஜ்ஞானத்தை வெளிப்படுத்தினார். இதற்குப் பின் இதர சாஸ்த்ரங்களிலும் அங்குள்ள வித்வான்களைத் தோற்கடித்து, அரசனிடமிருந்து பாதி ராஜ்யத்தையும் பரிசாகப் பெற்றுக்கொண்டார். அரசி தன் கட்சிக்கு ஜயம் ஏற்படவே மிகுந்தமகிழ்ச்சியுடன் 'என்னை ஆளவந்தீரோ' என்று கூற அதுமுதல் யமுனைத்துறைவருக்கு ஸ்ரீ ஆளவந்தார் என்ற திருநாமம் ஏற்பட்டது.

ஏற்கனவே ஸ்ரீமந்நாதமுனிகள் தன்னுடைய சிஷ்யராகிய உய்யக்கொண்டாரிடம்ஸகல ரஹஸ்யார்த்தங்களையும் உபதேசித்து, தன் பேரனுக்கு அதில் ஊக்கம் ஏற்பட்டவுடன் உபதேசிக்குமாறு நியமித்திருந்தார். உய்யக்கொண்டாரோ தன் ஆசார்யன் நியமனத்தைப் பூர்த்தி செய்ய முடியாமல் தன்னுடைய சிஷ்யராகிய மணக்கால்நம்பிக்கு உபதேசித்தருளிவிட்டு பரமபதித்தார். மணக்கால்நம்பி வெகு காலம் ஆளவந்தாரைநேரில்தெண்டன் ஸமர்ப்பிக்க முயற்சித்தும் ராஜாவாகிய ஆளவந்தாரை நேரில் பார்க்கமுடியாமல் ராஜாவின் திருமடப்பள்ளி கைங்கர்யபரர்களிடமிருந்து ராஜாவுக்குத் தூதுவளையில் அதிக ப்ரியம் என்று தெரிந்துகொண்டுதினந்தோறும் தூதுவளை கொண்டுவந்து கொடுத்தார். (தூதுவளை ஜ்ஞானவ்ருத்தி செய்யக் கூடியதுஎன்று பெரியோர்கள் கூறுகின்றனர்) இப்படியே ஆறு மாதகாலம் ஆனபின் ஒரு நாள் திடீரென்று தூதுவளையை நிறுத்த, அரசனும் அதுபற்றி விசாரிக்க, முடிவில் அரசனிடம் மணக்கால் நம்பி அறிமுகப்படுத்தப்பட்டார். ஸ்ரீ ஆளவந்தாரும் மணக்கால்நம்பியை விசாரிக்க அவரும், 'தேவரீருடைய பிதாமஹர் தம் குலதனத்தைத் தேவரீரிடம் ஒப்படைக்கும்படி நியமித்திருக்கிறார்' என்று கூறி, அவரை ஸ்ரீரங்கம் அழைத்துச் சென்று ஸ்ரீரங்கநாதனையே குலதனம் என்று ஒப்புவித்து ஸகல ரஹஸ்யார்த்தங்களையும் உபதேசித்தார். ஸ்ரீ ஆளவந்தாரும் ரஹஸ்யார்த்தங்களை க்ரஹித்து வைராக்யமுண்டாகி ஸ்ரீரங்கத்திலேயே வஸித்துவரலானார்.

இங்கேயே ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்துகொண்டு எழுந்தருளியிருக்கும் காலத்தில் தனக்குப் பின் யார் இந்த விசேஷ ஸம்ப்ரதாயத்தைக் காப்பாற்றுவார்கள் என்று கவலைகொண்ட ஸமயம், கேசவஸோமயாஜி என்பவருக்கு திருக்குமாரராய் அவதரித்திருந்த லக்ஷ்மணாசார்யரைப் பற்றிக் கேள்விப்பட்டு, அவரைப் பார்க்க காஞ்சி எழுந்தருளினார். அங்கு யாதவப்ரகாசரிடம் வித்யாப்யாஸம் செய்துகொண்டிருந்த ஸ்ரீராமானுஜர் ஒருஸமயம் யாதவப்ரகாசருடனும், பற்பல ஸஹபாடிகளுடனும் தேவராஜனை ஸேவிக்க எழுந்தருளும் ஸமயம் ஸ்ரீ ஆளவந்தார் ஸ்ரீராமானுஜரைக் குளிரக் கடாக்ஷித்து தனக்குப் பின்பு ஸம்ப்ரதாய ப்ரவசனத்திற்குத் தகுந்தவர் என்றும், வித்யாப்யாஸத்தை அவர் பூர்த்தி செய்து வரவேண்டும் என்றும் திருவுள்ளம் பற்றி, தான்மட்டில் ஸ்ரீரங்கத்துக்குத்திரும்பி எழுந்தருளினார். ஆயினும் ஸ்ரீராமானுஜரின் குருவின் தோற்றத்திலோ, அங்குள்ள சூழ்நிலையிலோ சரியான அபிப்ராயங்கொள்ளாத ஸ்ரீ ஆளவந்தார், ஸ்ரீராமானுஜரின் ஜ்ஞானத்திற்கு ஏதாவது விபரீதப் போக்கு ஏற்படக்கூடாதென்று எண்ணி, ஸத்ஸம்ப்ரதாயத்தில் ஸ்ரீராமானுஜரின் ஜ்ஞானத்தைநிறுத்திவைக்க வேண்டும் என்று முயற்சிக்க ஆரம்பித்தார். உயர்ந்த ஸம்ப்ராதாயார்த்தங்களைக் கொண்ட தாம் அருளிச்செய்த ஒரு ஸ்தோத்ரத்தை தம் சிஷ்யர்களில் ஒருவர்மூலம் ப்ரதிதினமும்தேவராஜனை ஸேவிக்கப் போகும் ஸமயம் ஸ்ரீராமானுஜரின் திருச்செவிகளில்படும்படியாக அநுஸந்தானம்செய்துவரும்படிநியமித்திருந்தார். இப்படி சில காலம் நடந்து வரவே ஸ்ரீராமானுஜனுக்கு இந்த ஸம்ப்ராதாயார்த்தங்கள் புலனாகி, இந்த ஸ்தோத்ரத்தின் கர்த்தா, ஸ்ரீ ஆளவந்தார் என விசாரித்து அறிந்து, அதுமுதல் ஏகலைவன் துரோணரை ஆசார்யனாகஅடைந்து ஶஸ்த்ராப்யாஸம் செய்தது போல (அநேகமாக அதற்கநுகுணமாகவே) ஸ்ரீ ஆளவந்தாரையே ஆசார்யராக வரித்துக் கொண்டார். இதுவிஷயத்தை ஸ்ரீபாஷ்யகாரரே '**यत्पदाम्भोरुहध्यानविध्वस्ताशेषकल्मषः**' என்று கீதாபாஷ்ய மங்கள ச்லோகத்தில் அருளிச் செய்தார். ஸ்ரீ ஆளவந்தாருக்கும், ஸ்ரீராமானுஜனுக்கும் ஆசார்யசிஷ்யபாவத்தைஏற்படுத்திக்கொடுத்த இந்த உயர்ந்த ஸ்தோத்ரம் நமது ஸம்ப்ரதாயத்தின் அடிப்படையான தத்துவங்களைக்

கொண்டது. இதனால்தான் அநேக ஸ்தோத்ரங்கள் இருக்க, இதை மட்டில் ஸ்தோத்ர ரத்னம் என பூர்வாசாரியர்கள் கூறினார்கள். (இந்த ஸ்தோத்ரரத்னத்தின் விஷயங்களை நாம் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமான படியால் சுருக்கமாகவும், க்ரமமாகவும் இவைகளை நாம் தெரிந்துகொள்வோம்) ஸ்ரீ ஆளவந்தாரை ஆசார்யராக வரித்தபோதிலும், ஸம்ப்ரதாயார்த்தங்களை முன் கூறியபடி அந்த மஹானிடமிருந்து அடைந்தபோதிலும், ஸ்ரீ பாஷ்யகாரருக்கு நேரில் அந்த மஹானின் திருவடிவாரத்தில் வஸித்திருக்கும்படியான பாக்யம் கிடைக்கவில்லை. (இது விஷயங்களை ஸ்ரீராமானுஜரின் திவ்ய சரித்திரத்திலிருந்து நாம் தெரிந்துகொள்கிறோம்) அநாதிகாலமாக அநுஷ்டானத்தில் இருந்து வந்ததும், போதாயனர், டங்கர், த்ரமிடர். குஹதேவர் முதலியவர்களால் விஸ்தரிக்கப்பட்டிருந்ததுமான ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயார்த்தங்களுக்கநுகுணமாக ஸ்ரீ வ்யாஸ ஸூத்ரங்களுக்கு பாஷ்யம் எழுதிய பெருமையை உடையவரும் அதனால் ஸ்ரீபாஷ்யகாரர் என்ற புகழும் அடைந்த ஸ்ரீராமானுஜர் ஸ்ரீ ஆளவந்தாரே தனக்கு ஆசார்யன் என்ற முறையில் அழகாக அந்த மஹானை வேதார்த்தஸங்க்ரஹத்தில் புகழ்ந்திருக்கிறார். விசிஷ்டாத்வைதரீதியில் பரதத்வமாகிற விஷ்ணுவை மங்களச்லோக ரூபமாக த்யானம் செய்துவிட்டு, அடுத்தபடியாக ஆசார்யனை ஸ்தோத்ரம் செய்கிறார். வேதங்களாகிற ச்ருதிகளுக்கும், யுக்திகளுக்கும் விரோதமான கருத்துக்களுடனும் உலகில் பாவி ஜனங்களை மயக்கக்கூடியதாயுமிருக்கிற அஜ்ஞானம் என்ற இருளை எந்த ஆசார்யன் (தன் தேஜஸால்) போக்கடித்தாரோ, அப்பேர்ப்பட்ட முனிச்ரேஷ்டராகிய ஸ்ரீயாமுனாசார்யர் விளங்குகிறார்' என்கிறார்.

ஆகவே ஸ்ரீபகவத்ராமானுஜதர்சனம் ஸ்ரீ விசிஷ்டாத்வைதஸித்தாந்தம் என்றெல்லாம் ப்ரஸித்தி பெற்ற, இந்த ஸத்ஸம்ப்ரதாயங்கள் எல்லாம் அநாதிகாலமானபோதிலும் 'वंशे जातं' என்றெல்லாம் ஸத்குலப்ரஸூதியைப் பற்றி பூர்வாசார்யர்கள் பெருமைப்படக்கூடிய அளவில் நாதமுனிகளால் வெளியிடப்பட்டிருப்பினும், ஸ்ரீபாஷ்யகாரரின் பெருமையே வெளியிடுகின்றன என்பது ஸ்பஷ்டம். ஸ்ரீபாஷ்யகாரரோவெனில் இப்பெருமைக்குக் காரணம் ஸ்ரீ ஆளவந்தாரே எனக் கூறுகிறார்.

குறிப்பு:— ஸ்ரீ ஆளவந்தார் திருநக்ஷத்ர தினத்தில் ஸ்ரீவிசிஷ்டாத்வைதஸித்தாந்தத்தில் ஒவ்வொருவரும் ஈடுபடவேண்டிய முக்யத்வம் இதனால் விளங்குகிறது. இது மிகவும் அவசியமானதாகவும், பொருத்தமுள்ளதாக அமைந்திருக்கிறதென்பதும், ஸ்ரீபாஷ்யகாரர திருவுள்ளத்திற்கே உகந்ததென்பதும் நமக்கு நன்கு விளங்குகிறது.

ஸ்ரீவிசிஷ்டாத்வைதஸித்தாந்த ஸ்தாபனத்துக்கென்று ஏற்பட்டுள்ள ஸ்ரீ அஹோபில மடத்தில் 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய், ஸ்ரீமத்வேதமார்க்கப்ரதிஷ்டாபநாசார்யராயும், ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதி பிருதாலங்க்ருதராயும் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவண் சடகோபஸ்ரீவீரராகவசடகோபயதீந்த்ரமஹா தேசிகன் ஆஸேதுஹிமாசலம் ஸஞ்சாரம் செய்தருளிவிட்டு நமக்கு ப்ரதான மந்த்ரத்துக்கு ப்ரதான தேவதையான பத்ரீநாராயணனையும் மங்களாசாஸனம் செய்துவிட்டு கங்கைக்கரையில் உள்ள (புனிதமான) ஹ்ருஷீகேசம் என்ற க்ஷேத்ரத்தில் சாதுர்மாஸ்யஸங்கல்பத்துக்காகவும எழுந்தருளியிருக்கும் இது ஸமயம் ஸ்ரீ ஆளவந்தார் திருநக்ஷத்திர தினந் துடங்கி ஸ்ரீவிசிஷ்டாத்வைதஸித்தாந்த ஸ்தாபனத்துக்கென்றே வித்வத்ஸதஸ் நடத்திவரும்படியான ஒரு உத்க்ருஷ்டமான நிலைமை இதுஸமயம் ஏற்பட்டிருக்கிறதென்பது இந்த ஸித்தாந்த சரித்திரத்திலேயே ஒரு புனிதமான நிகழ்ச்சியாகிறது.

ஸ்ரீயாமுனாசார்யர் ஆக்கியாழ்வானுடன் வாதம் புரியச் சென்ற ஸமயம் 'ஹிமவத்பர்வதம் முதல் ஸேது வரையிலும், உதயபர்வதம் முதல் அஸ்தமனபர்வதம் வரையிலும் உள்ள பூமியில் எனக்கு நிகராய் உள்ள பூர்வோத்தர மீமாம்ஸா சாஸ்த்ரங்களில் நிபுணர்களைத் தேட வேண்டும்' என்ற கருத்தைக் கொண்ட பிருதுடன் எழுந்தருளியதாக நாம் கேட்டதுண்டு. அம்மாதிரியான ஸம்பவங்களே இதுஸமயம் நமக்கு ஸாக்ஷாத்தாக உதிக்கின்றன. ஹ்ருஷீகேசத்தில் ஸ்ரீமதழகியசிங்கர் ஸந்நிதியிலேயே ஸ்ரீவிசிஷ்டாத்வைத வித்வத்ஸதஸ் இதுஸமயம் நடந்துவருகிறதென்றாலும், ஸ்ரீமதழகியசிங்கர் திருவுள்ளத்தையநுஸரித்து, நமது ஸம்ப்ரதாயத்தில் ஆசார்யன் பக்கல் காலக்ஷேபாதிகளைச் செய்த பல வித்வான்கள் ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தில் வாக்யார்த்தங்களும், உபந்யாஸாதிகளும் செய்தும் வருகிறார்கள் என்பதும் நமது ஸித்தாந்தத்தின் பெருமையை விளக்குகிறது.

ஸ்ரீ:

ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வீரராகவசடகோபயதீந்த்ர மஹாதேசிகன்
(37-வது பட்டம்) அருளிச்செய்த

ஸ்ரீமச் சாரீரக ஸுப்ரபாதம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

आप्नोति ब्रह्मवित्तत्परमथ गगनाद्यात्मनो भूतमात्मा
देहप्राणात्मभिन्नः प्रमदमय इहास्यैष आत्मा न चान्यः ।
सैष त्विच्छन्बहुस्यामिति जगदसृजत्सोऽपरिच्छिन्नमोदो
हीत्यत्रानन्दवल्ल्यां सुखशयित समुत्तिष्ठ सुष्ठु प्रभातम् ॥ ६

ஆப்நோதி ப்ரஹ்மவித் தத் பரமத ககநாத்யாத்மநோ பூதம், ஆத்மா
தேஹப்ராணாத்மபிந்ந: ப்ரமதமய இஹாஸ்யைஷ ஆத்மா ந சாந்ய: ।
ஸைஷத்விச்சந் பஹுஸ்யாமிதி ஜகதஸ்ருஜத்ஸோபரிச்சிந்நமோதோ
ஹீத்யத்ராநந்தவல்ல்யாம் ஸுகசயித ஸமுத்திஷ்ட ஸுஷ்டு ப்ரபாதம்

(ப-ரை) ப்ரஹ்மவித்- ப்ரஹ்மத்தை அறிந்தவன், (உபாஸித்தவன்) தத்- அந்த, பரம்- பரப்ரஹ்மத்தை, அத- பிறகு (சரீரவியோககாலத்தில்) ஆப்நோதி- அடைகிறான். ஆத்மந:- ஆத்மாவான பரப்ரஹ்மத்தினிடமிருந்து, ககநாதி- ஆகாசம் முதலிய பஞ்சபூதங்கள், பூதம்- உண்டாயின, ஆத்மா- அந்த ஆத்மா, தேஹப்ராணாத்மபிந்ந:- சரீரம், ப்ராணன், மனது, ஜீவன் இவற்றைக்காட்டிலும் வேறுபட்டவன், ப்ரமதமய: - ஆனந்தமயன், இஹ- இங்கு, அஸ்ய- இந்த ஆனந்தமயனுக்கு, ஏஷ: ஆத்மா- இவனே ஆத்மா, ந ச அந்ய:- வேறு ஆத்மா கிடையாது. ஸ: ஏஷ: து- இந்த ஆனந்தமயனான ஆத்மாவே, பஹுஸ்யாம் இதி இச்சந்- பஹுவாக ஆகக்கடவேன் என்று ஸங்கல்பித்து, ஜகத் - உலகத்தை அஸ்ருஜத் - ஸ்ருஷ்டித்தது. ஸ:- அவன், அபரிச்சிந்நமோத: ஹி - அளவிடமுடியாத ஆனந்தமுடையவன் என்பது ப்ரஸித்தம். இதி அத்ர ஆனந்தவல்யாம் - என்று கூறும் ஆனந்தவல்லியெனும் வேதபாகத்தில், ஸுகசயித - ஸுகமாகத் திருக்கண்வளர்ந்தருளும் வாரணசைலநாதனே! ஸுஷ்டு ப்ரபாதம்- நன்றாகப்பொழுது விடிந்தது, ஸமுத்திஷ்ட - திருப்பள்ளியெழுந்தருளவேணும்.

இந்த ச்லோகம் தைத்திரீய உபநிஷத்திலுள்ள ஆனந்தவல்லியை விஷயமாகவுடைய ஆனந்தமயாதிகரணவிஷயகம். ஸ்வரூபத்தாலும் குணங்களாலும் எல்லாவற்றையும்விட மிகவுமுயர்ந்த ப்ரஹ்மத்தை உபாஸிக்கிறவன், அவ்விதமான ப்ரஹ்மத்தை முக்திகாலத்தில் அடைகிறான்; ஆகாசம் முதலிய ஐந்து பூதங்களும் அந்த ஆத்மாவாகிய ப்ரஹ்மத்தினிடமிருந்து உண்டாயின. அந்த ஆத்மா, சரீரம், ப்ராணன், மனது, ஜீவன் இவற்றைவிட வேறானவன்; ஆனந்தமயன்; இவற்றுக்கும் ஆத்மா; இவனுக்கு வேறு ஆத்மா கிடையாது

அநந்யாத்மா; அந்த ஆனந்தமயனான ஆத்மா, தேவமநுஷ்யாதிரூபமாய் பஹுவாக ஆகப்போகிறேன்; அதற்காக ஆகாசாதிரூபமாய் பலவாக ஆகிறேன் என்று ஸங்கல்பித்து உலகை ஸ்ருஷ்டித்தது. அந்த ஆனந்தமயனான ஆத்மாவினுடைய ஆனந்தத்துக்கு எல்லையில்லை; அதைவிட மேலானதுமில்லை யென்று சொல்லும் ஆனந்தவல்லியில் திருக்கண்வளர்பவனை எழுந்திருக்கவேணும். நன்கு விடிந்தது என்று ப்ரார்த்தித்தபடி.

இங்கு 'ब्रह्मविदाप्नोति परं । तस्माद्वा एतस्मादात्मन आकाशस्संभूतः । आकाशाद्वायुः .... இத்யாதி வாக்யங்களும், 'तस्माद्वा एतस्माद्विज्ञानमयात् । अन्योऽन्तर आत्माऽऽनन्दमयः ...——— तस्यैष एव शारीर आत्मा. सोऽकामयत । बहुस्यां प्रजायेयेति' இவை முதலிய வாக்யங்களும் அநுஸந்தேயங்கள். இவைகளின் பொருளை பதவுரையிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

தேஹப்ராணாத்மபிந்ந: என்றவிடத்திலுள்ள 'ஆத்மா' என்ற பதம் மனத்தையும் ஜீவனையும் சொல்லி, மனதையும் விட வேறானது ஆனந்தமயமான ப்ரஹ்மம் என்பதைத் தெரிவிக்கும்.

ஆனந்தமய பர்யாயத்தில் 'தஸ்யைஷ ஏவ சாரீர ஆத்மா' என்று சொன்னது இவ்வானந்தமயனுக்கு வேறு ஆத்மா இல்லை (அநந்யாத்மா) என்பதற்காக. அது 'அஸ்யைஷ ஆத்மா ந சாந்ய:' என்றதால் தெரிவிக்கப்படுகிறது.

'அபரிச்சிந்நமோத:' ஆனந்தமீமாம்ஸை செய்து 'யதோ வாசோ நிவர்த்தந்தே' என்னுமளவாகச் சொல்லப்பட்ட அளவற்ற ஆனந்தமுடையவன் என்றபடி.

இந்த அதிகரணத்தின் பூர்வபக்ஷஸங்க்ரஹம்:— ஜகத்காரணமான வஸ்துவுக்கு ஸங்கல்பம் சொல்லியிருப்பதால், அசேதநமன்றாகிலும் சேதநனான ஜீவனாயிருக்கலாம். ஆனந்தவல்லியில் ஆனந்தமயனாகச் சொல்லப்பட்டவன் ஜீவன்தான். ஏனெனில், 'தஸ்யைஷ ஏவ சாரீர ஆத்மா' என்று அவனுக்கு சரீரஸம்பந்தம் சொல்லியிருக்கிறது. கர்மபரவசனான ஜீவனுக்குத்தான் கர்மபலனை அனுபவிப்பதற்காக சரீரஸம்பந்தம் ஸம்பவிக்கும். அசர்மவச்யனான பரமாத்மாவுக்கு அது ஸம்பவிக்காது. ஆதலால் சரீரஸம்பந்தமுடையவனாகச் சொல்லப்பட்ட ஆனந்தமயன் ஜீவன். அவனே ஜகத்காரணம் என்று.

ஸித்தாந்த ஸங்க்ரஹம்:— நூறு நூறாகப் பெருக்கிக்கொண்டுபோய், இதைவிட மேலான ஆனந்தமில்லை யென்று முடித்த அளவற்ற ஆனந்தம் ஜீவனிடம் ஒருபோதும் ஸம்பவிக்காது. சாரீர ஆத்மா என்பது ஜகத்தை சரீரமாகவுடையவன் பரமாத்மாவான ஆனந்தமயன் என்பதைச் சொல்லுகிறது. ஆனந்தமய: என்றவிடத்திலுள்ள மயட் ப்ரத்யயம் விகாரத்தைச் சொல்லவில்லை. ஆதிக்யத்தைச் சொல்லுகிறது. 'ஏதஸ்மாத் விஜ்ஞாநமயாத் அந்யோऽந்தர ஆத்மாऽऽநந்தமய:' என்பதால் ஜ்ஞானஸ்வரூபனான ஜீவனை விட வேறானவன் ஆனந்தமயன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 'விபச்சிதா' என்று இந்த ஆனந்தமயனுக்கு விபச்சித்த்வம் சொல்லியிருக்கிறது. அதாவது:— ஒரு காரணத்தால் வந்ததன்றி, வேறொருவருக்கும் அதீநமின்றிக்கேயிருக்கும் ஸர்வவிஷயமான ஜ்ஞானத்தையுடைத்தாயிருக்கும் தன்மை. இது நித்யமுக்தர்களுக்கும் கிடையாது. இந்த ஆனந்த

மயனே ஜீவனுக்கு ஆனந்தத்தைக் கொடுப்பதாக 'ஏஷ ஹ்யேவாநந்தயாதி' என்று சொல்லியிருக்கிறது. இந்த ஆனந்தமயனுடைய லாபத்தால் இஜ்ஜீவன் ஆனந்தமுடையவனாக ஆகிறான் என்று 'ரஸம் ஹ்யேவாயம் லப்த்வா ஆநந்தீபவதி' என்ற வாக்யம் சொல்லுகிறது. ஆதலால் ஆனந்தமயன் ஜீவனல்லன், பரமாத்மாவே. (உயர்நலமுடையவன் அவனே.)

आदित्यान्तर्नखान्तं कनकमयतनुस्तादृशश्मश्रुकेशः
कप्यासांभोरुहाक्षो दुरितत उदितो दृश्यते दिव्यरूपः ।
योऽसावक्षणीक्ष्यतेऽन्तः श्रुतिमयपुरुषो ब्रह्म तत्तस्य रूपं
तद्यद्ध्वस्येति वेदे सुखशयित समुत्तिष्ठ सुष्ठु प्रभातम् ॥ ४

ஆதித்யாந்தர்நகாந்தம் கநகமயதநுஸ்தாத்ருசச்மச்ருகேச:
கப்யாஸாம்போருஹாக்ஷோ துரிதத உதிதோ த்ருச்யதே திவ்யரூப: ।
யோஸாவக்ஷணீக்ஷ்யதேऽந்த: ச்ருதிமயபுருஷோ ப்ரஹ்ம தத்தஸ்யரூபம்
தத்யத்ஹ்யஸ்யேதி வேதே ஸுகசயித ஸமுத்திஷ்ட ஸுஷ்டு ப்ரபாதம்

(பதவுரை) ஆதித்ய அந்த: - ஸூர்யமண்டலத்துக்குள், நகாந்தம் – நகம் வரையிலும், கநகமயதநு:– தங்கமயமான திருமேனியையுடையவனாய், தாத்ருசச்மச்ருகேச: — அவ்விதமேயுள்ள ச்மச்ரு (மீசை) கூந்தல் இவைகளை யுடையவனாய், கப்யாஸ அம்போருஹாக்ஷ:– கப்யாஸமான தாமரை போன்ற திருக்கண்களையுடையவனாய், துரிதத:– பாபத்திலிருந்து, உதித:- வெளிக்கிளம்பியவனாய், திவ்யரூப:– அப்ராக்ருதமான திருமேனியையுடையவனாய், த்ருச்யதே – எவன் காணப்படுகிறானோ, ய: அஸௌ – யாதொரு, ச்ருதிமய:– வேதமயமான புருஷன், அக்ஷணி அந்த:– கண்ணுக்குள், ஈக்ஷ்யதே– பார்க்கப்படுகிறானோ, தத்- அந்த புருஷன், ப்ரஹ்ம– ப்ரஹ்மமே, யத்- எந்த ரூபமானது, அஸ்ய – ஸூர்யமண்டலத்துள்ளிருப்பவனுக்குள்ளதோ, தத் தஸ்ய ரூபம் ஹி – அந்த ஹிரண்மயத்வாதிரூபமே கண்ணுக்குள் இருக்கும் புருஷனுக்கும், இதி வேதே– என்கிற வேதத்தில், ஸுகசயித– ஸுகமாகத் திருக்கண்வளர்ந்தருளும் தேவாதிராஜனே! ஸுஷ்டு ப்ரபாதம் – நன்றாகப் பொழுதுவிடிந்துவிட்டது, ஸமுத்திஷ்ட– திருப்பள்ளியெழுந்தருளவேணும்.

இந்த ச்லோகம் அந்தராதிகரணத்தை விஷயமாகக்கொண்டது. சாந்தோக்யத்தில் முதல் அத்யாயத்தில் 6, 7 கண்டங்களில் இதற்கு விஷயவாக்யங்களிருக்கின்றன.

இங்கு (1) 'अथ य एषोऽन्तरादित्ये हिरणमयः पुरुषो दृश्यते हिरण्यश्मश्रुर्हिरण्यकेश आप्रणखात् सर्व एव सुवर्णः। तस्य यथा कप्यासं पुण्डरीकं, एवमक्षिणी, तस्य उदिति नाम, स एष सर्वेभ्यः पाप्मभ्य उदितः' (சா-1-6, 7) என்ற ச்ருதிவாக்யங்கள் பூர்வார்த்தத்திலும், (2) 'अथ य एषोऽन्तरक्षिणि पुरुषो दृश्यते, सैवर्क्, तत्साम, तदुक्थं, तद्यजुः, तद्ब्रह्म, तस्यैतस्य तदेव रूपं, यदमुष्य रूपम्' (சா-1-7-5) என்ற சுருதிவாக்யங்கள் உத்தரார்த்தத்திலும் விவக்ஷிதங்கள். இந்த சுருதி வாக்யங்களின் பொருள் வருமாறு:—

(1) ஸூர்யமண்டலத்துக்குள் தங்கமயமானவனும், தங்கமான மீசையுள்ளவனும், தங்கமான தலைமயிருள்ளவனும், நகங்களுள்பட முழுவதும் தங்கமுமான எந்தப் புருஷன் (யோகிகளால்) பார்க்கப்படுகிறானோ, கப்யாஸமான தாமரை எப்படியிருக்குமோ, அப்படியிருக்கும் அவன் திருக்கண்கள். அவனுக்கு 'உத்' என்று திருநாமம். அந்த இவன் ஸர்வ பாபங்களிலிருந்தும் வெளிவந்தவன்.

(2) எந்தப் புருஷன் கண்ணுக்குள் (யோகிகளால்) பார்க்கப்படுகிறானோ, அவனே ருக் ஸாம யஜுஸ் ஸ்வரூபனாயும், உக்த்தம் என்ற சஸ்த்ர ஸ்வரூபனாயுமிருக்கிறான்; அவனே ப்ரஹ்மம்; கண்ணுள்ளிருக்குமவனுக்கு ரூபம் பெயர் முதலானவைகள் ஸூர்யனிடத்திலிருக்குமவனுக்குப்போலவே. (ஹோதா முதலிய ருத்துவிக்குக்களினால் சொல்லப்படும் ருக்வேத மந்த்ரங்களுக்கு சஸ்த்ரம் என்று பெயர்.)

கப்யாஸம் புண்டரீகம்:— இதற்கு மூன்று அர்த்தங்கள் வார்த்திககாரரால் ஸித்தாந்தார்த்தங்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவையாவன:— (1) ஜலத்திலிருக்கிற தாமரை. ஜலத்தைவிட்டு எடுக்கப்பட்ட தாமரை புஷ்பத்தைக்காட்டிலும் ஜலத்திலிருக்கும் தாமரைக்கு சோபை அதிகமாகையால் இவ்விதம் இங்கு கூறியிருக்கிறது. (2) தண்டிலிருக்கிற தாமரை, தண்டிலிருந்து கொய்யப்பட்ட பூவைவிட தண்டுடனிருக்கும் பூவிற்கு சோபை அதிகமாகையால் இவ்விதம் வர்ணித்திருக்கிறது. (3) ஸூர்யகிரணங்களால் மலரச்செய்யப்பெற்ற தாமரை. வேறுவிதமாக மலரச்செய்யும் தாமரைப் புஷ்பத்தைக்காட்டிலும் ஸூர்யகிரணத்தால் மலரும் தாமரைப்பூவுக்கு அதிகமான சோபை ஏற்படுமாதலால் இவ்விதம் வர்ணிக்கப்பட்டது. இந்த மூன்று அர்த்தங்களையும் திருவுள்ளம்பற்றி ஸ்ரீபாஷ்யகாரர் வேதார்த்தஸங்க்ரஹத்தில், **'गम्भीराम्भस्संभूत - सुमृष्टनाळ - रविकरविकसित - पुण्डरीकदळामलायतेक्षणः'** என்று அருளிச்செய்திருக்கிறார். (ஆழமான ஜலத்தில் உண்டானதும், த்ருடமான தண்டுடன் கூடியதும், ஸூர்யகிரணங்களால் மலரச்செய்யப் பெற்றதுமான தாமரைப்புஷ்பத்தின் இதழ்போன்ற அழுக்கற்ற திருக்கண்களை யுடையவன்.)

ஸூர்யமண்டலத்தில் யோகிகளால் தங்கமயமான ஒரு புருஷன் பார்க்கப்படுகிறான். அவனுடைய மீசை, தலைமயிர், நகம் இவை முதலிய எல்லா அவயவங்களும் தங்கமயமானவை. புண்டரீகாக்ஷன், ஸர்வபாபங்களினின்றும் வெளிக்கிளம்பினவன்; அப்ராக்ருதமான திருமேனியுள்ளவன். கண்ணுள் எந்த புருஷன் யோகிகளால் பார்க்கப்படுகிறானோ, இவன் ஸகல வேதஸ்வரூபன்; இவன்தான் ப்ரஹ்மம். ஸூர்யமண்டலத்திலிருப்பவனாகச் சொன்ன புருஷனுக்கு எந்த ரூபம் முதலியவைகளுண்டோ, அவைகள் இந்தப் புருஷனுக்குமுண்டு என்று சொல்லும் சாந்தோக்யவேதத்தில் ஸூசகமாகக்கண்வளர்ந்தருளும் ஹஸ்தீசனே! நன்கு விடிந்தது திருப்பள்ளியெழுந்தருளாய்.

(தொடரும்)

ஸ்ரீ:

நூற்றெட்டுத் திருப்பதிகள்

(6-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

பாண்டிய நாட்டுத் திருப்பதிகள் 18

41. திருமாலிருஞ்சோலை 1. அழகர் கோயில் அழகர்—மாலலங்காரர். கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம். ஸுந்தரவல்லி நாச்சியார். ஸோமஸுந்தர விமானம். சிலம்பாறு. வ்ருஷபகிரி. சந்தன வ்ருக்ஷம். மலயத்வஜ பாண்டியனுக்கும், தர்மதேவதைக்கும் ப்ரத்யக்ஷம். இத்திவ்யதேசம் தென் மதுரையிலிருந்து 12 மைலில் உள்ளது.

பெரியாழ்வார்:-'உன்னையும்' 'சுற்றிநின்று' அலம்பா 11. உருப்பிணி 11. துக்கச்சுழலை10.

ஆண்டாள்:- 'தெள்ளியார் பலர்' சிந்து 10. 'மழையே'.

திருமங்கையாழ்வார்:— 'வண் கையான' 'உளங்கனித்து' 'சிந்தை தன்னுள்' 'எட்டனை' 'சேயோங்கு' 'வேயிருஞ்சோலை' 'பஞ்சபர்' முந்துர 10. மூவரில் 10. 'பத்துராவியை' 'மஞ்சுறு' 'தேனொடு' 'பாயிரும்' 'சீராரும்' 'மன்னனை'.

பூதத்தாழ்வார்:-'பயின்றதரங்கம்' 'உணர்ந்தாய்' 'வெற்பென்று'.

பேயாழ்வார்:-'பண்டெல்லாம்'.

நம்மாழ்வார்:-கிளரொளி 1. முடிச்சோதி11 முந்நீர் ஞாலம் 11 செஞ்சொல் கவிகாள் 11. 'திருமாலிருஞ்சோலை' 'திருப்பேர்நகரான்' ஆக பா, 128.

42. திருக்கோட்டியூர் 2. ஸௌம்யநாராயணன். கிழக்கே திருமுகமண்டலம். நின்றும் இருந்தும், நடந்தும், கிடந்தும், கூத்தாடியும் நின்ற திருக்கோலம். (கர்ப்பக்ருஹம் நான்கு தளங்களாயுள்ளது. தரை மட்டம் சயனம். மேல் மாடியில நின்ற திருக்கோலம். அதன் மேல் வீற்றிருந்த திருக்கோலம். தரை மட்டத்தின் கீழ் நடன க்ருஷ்ணன். ப்ராகாரத்தில் ஹிரண்யனை ஒடிப் பிடிப்பது போலவும், மார்பைப் பிளப்பது போலவும் சிங்கபிரான் திருவுருவங்கள் இரண்டுள்ளன. ஆகையால் இத்தலத்தில் நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும், கூத்தாடியும் ஸேவை ஸாதிக்கும் திருக்கோலங்கள் உள்ளன.)

திருமாமகள் நாச்சியார். அஷ்டாங்கவிமானம். தேவபுஷ்கரிணி. இந்திரனுக்கும் கதம்ப மஹரிஷிக்கும் ப்ரத்யக்ஷம். இத்தலம் மானா மதுரை ஸ்டேஷனிலிருந்து 17 மைலில் உள்ளது. திருக்கோட்டியூர் நம்பிகளிடம் எம்பெருமானார் திருமந்த்ரார்த்த ரஹஸ்யத்தை 18 தடவைகள் சென்று உபதேசம் பெற்ற இடம்.

பெரியாழ்வார்:- வண்ண மாடங்கள் 10. 'கொங்கு' காவகாரியம் 11.

திருமங்கையாழ்வார்:- 'தாயேன் பிறர்க்கு' எங்கள் 10. 'கம்பமா' 'மன்னனை'.

பூதத்தாழ்வார்:-'பயின்றதரங்கம்' 'இன்றுவரிக்கின்றேன்'.

பேயாழ்வார்:— 'விண்ணகரம்'.

திருமழிசையாழ்வார்:— 'குறிப்பெனக்கு' ஆக, பா, 39.

43. திருமெய்யம். 3. ஸத்யகிரிநாதன், கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம். உய்யவந்த நாச்சியார் ஸத்யகிரி விமானம். ஸத்யதீர்த்தம். கதம்ப புஷ்கரிணி. பலாவ்ருக்ஷம். ஸத்யதேவதைகளுக்கு ப்ரத்யக்ஷம். திருமெய்யம் ஸ்டேஷன்.

திருமங்கையாழ்வார்:-'உடம்புருவில்' 'சிலையாளா' 'கட்டேறு' 'அருவிசோர்' 'வேயிரும்' 'சுடலையில்' 'மையார் கடலும்' 'பிண்டியார்' 'அன்னவுருவில்' ஆக, பா 9.

44. திருப்புல்லாணி 4. கல்யாண ஜகந்நாதன். தெய்வச் சிலையான். கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம். கல்யாணவல்லி. கல்யாண விமானம். ஹேமதீர்த்தம். சக்ர தீர்த்தம். அச்வத்த வ்ருக்ஷம். புல்லாரண்ய ரிஷிக்கும், அச்வத்த நாராயணனுக்கும் ப்ரத்யக்ஷம். கோயில் ப்ராகாரத்தில் சக்ரவர்த்தித் திருமகன் தர்ப்பத்தில் சயனகோலமாக

ஸேவை ஸாதிக்கிறன். இராமநாதபுரத்திலிருந்து 6 மைலில் உள்ளது இவ்வூர்.

திருமங்கையாழ்வார்:—தன்னை 10. காவார் 10. 'மன்னுமறை' ஆக, பா 21.

45. திருத்தண்கால் 5. தண்காலப்பன். கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம். அன்னநாயகி, அநந்தநாயகி, அம்ருதநாயகி, ஜாம்பவதி ஆகிய நாச்சிமார் நால்வர். தேவசந்த்ர விமானம். பாபவிநாச தீர்த்தம். சுஷ்யபாண்டியன், ஸ்ரீவல்லபன், புலி ஆகிய மூவர்க்கும் ப்ரத்யக்ஷம். இந்த க்ஷேத்ரம் சிவகாசியிலிருந்து 2 மைலில் உள்ளது.

திருமங்கையாழ்வார்:— 'பேரானை' 'பொங்கார்' 'பேராலி' 'மன்னும்'.

பூதத்தாழ்வார்:— 'தமருள்ளம்' ஆக, பா 5.

46. திருமோகூர் 6. காளமேகப் பெருமாள் கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம். திருமோகூர்வல்லி, மேகவல்லி. கேதகி விமானம். க்ஷீராப்தி புஷ்கரிணி. அஜ, ருத்ரேந்த்ராதிகளுக்கு ப்ரத்யக்ஷம். மதுரையிலிருந்து 7 மைல்.

திருமங்கையாழ்வார்:— 'சீராரும்'

நம்மாழ்வார்:—தாளதாமரை 11. ஆக பா 12.

47. திருக்கூடல் 7. (தென் மதுரை) கூடலழகர். கிழக்கே திருமுகமண்டலம். வீற்றிருந்த திருக்கோலம். வகுளவல்லி, மரகதவல்லி, வருணவல்லி, மதுரைவல்லி' அஷ்டாங்கவிமானம். ஹேமபுஷ்கரிணி. சக்கர தீர்த்தம். பிருகு, பெரியாழ்வார். ஸௌநகாதிகளுக்கு ப்ரத்யக்ஷம். மதுரை ஸ்டேஷன்.

திருமங்கையாழ்வார்:— 'கோழியும்,.

திருமழிசையாழ்வார்:— 'அழைப்பன்' ஆக பா 2.

48 ஸ்ரீவில்லிபுத்தூர் 8. வடபத்ரசயனன். கிழக்கே திருமுகமண்டலம். சயனம். ரங்கமன்னார். கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம். ஆண்டாள் கோதை நாச்சியார். ஸம்சனவிமானம். திருமுக்குளம். மண்டுகமஹரிஷிக்கும் பெரியாழ்வாருக்கும் ப்ரத்யக்ஷம். பெரியாழ்வார், ஆண்டாள் திரு அவதாரஸ்தலம். ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்டேஷன்.

பெரியாழ்வார்:— 'மின்னனைய நுண்ணிடையார்' 'மென்னடையன்னம்' ஆக, பா 2.

49. திருக்குருகூர் — ஆழ்வார் திருநகரி 9. ஆதிநாதப்பெருமாள். பொலிந்துநின்றபிரான். கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம். ஆதிநாதவல்லி. கோவிந்த விமானம். தாமிரபருணி நதி. பிரம்ம தீர்த்தம். ப்ரஹ்மாவுக்கும், நம்மாழ்வாருக்கும், மதுரகவிகளுக்கும் ப்ரத்யக்ஷம். நம்மாழ்வார் அவதாரஸ்தலம். திருநெல்வேலி ஸ்டேஷன்.

நம்மாழ்வார்:— ஒன்றும் தேவும் 10.

50. தொலைவில்லிமங்கலம் 10. ஸ்ரீநிவாஸன். தேவபிரான். கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம். அரவிந்த லோசனன்—செந்தாமரைக் கண்ணன். கிழக்கே வீற்றிருந்த திருக்கோலம். கருந்தடங்கண்ணி. குமுத விமானம். தாமிரபர்ணி நதி. வருண தீர்த்தம். இந்திரன், வருணன், வாயு இவர்களுக்கு ப்ரத்யக்ஷம். ஆழ்வார் திருநகரியிலிருந்து 2 மைலில் உள்ளது.

நம்மாழ்வார்:— துவளில் 11.

51. சிரீவரமங்கை—வானமாமலை 11. வானமாமலைப் பெருமாள், தெய்வநாயகன், தோதாத்ரிநாதன். கிழக்கே திருமுகமண்டலம். வீற்றிருந்த திருக்கோலம். சிரீவரமங்கை நாச்சியார். நந்தவர்த்தன விமானம். இந்திரபுஷ்கரிணி. சேற்றுத் தாமரை தீர்த்தம். ஸ்ரீபூமிநீளாஸமேதனாய் ஸேனை முதலியார், பெரிய திருவடியுடன் சாமரகன்னியர், சந்திர, சூர்யர்கள் பக்கத்தில் இருக்க ப்ரஹ்மா, இந்திரன், ரோமேஸர், ப்ருகு, மார்க்கண்டேயர் இவர்களுக்கு ப்ரத்யக்ஷம். இத்தலம் திருநெல்வேலியிலிருந்து 18 மைலில் உள்ளது.

நம்மாழ்வார்:— நோற்ற நோன்பு 11.

52. திருப்புளிங்குடி 12. காய்ச்சின வேந்தன். கிழக்கே திருமுகமண்டலம். புஜங்க சயனம். மலர்மகள் நாச்சியார். புளிங்குடிவல்லி. வேதஸார விமானம். வருண நிருதி தீர்த்தங்கள். வருணன், நிருதி, தர்மராஜன் இவர்களுக்குப் பிரத்யக்ஷம். ஸ்ரீவைகுண்டத்திலிருந்து 2 மைலில் இத்தலம் உள்ளது.

நம்மாழ்வார்:— பண்டை நாளாலே 11. கொடியார்' ஆக, பா 12.

ஸ்ரீ:

ஹிந்து நாகரீகமும், இன்றைய ஹிந்துவின் நிலையும்

ஸமீபத்தில் ஓர் ஆங்கிலபுத்தகத்தில் ஹிந்து மதத்தைப் பற்றியக் குறிப்புகளைப் பார்த்தேன். அதில் 'ஹிந்துமதம் என்பது எண்ணிக்கையற்ற ஜாதிகளையுடைய மதம்' என்ற பொருள் கொண்ட வாக்யம் காணப்பட்டது. பாவம்! அந்த எழுத்தாளர் (!) ஹிந்துமதத்தில் உள்ள பல உன்னத அம்சங்களை விட்டு விட்டு, இந்த அம்சத்தை மட்டில் எடுத்துக் கொண்டு ஹிந்து மதத்தைப் பலவாறாகத் தூஷித்திருந்தார். நம்முடைய பாரதத்திலேயே சிலர் அதை இகழும்போது, வெளி நாட்டின் அறியாத ஓர் எழுத்தாளரைப் பற்றிக்கேட்பானேன்? இந்த நிலையில், நாம் ஒவ்வொருவரும் நம்முடைய மதத்தின் பெருமையைப் பற்றித் தெரிந்துகொள்வதுடன் இன்றைய சூழ்நிலையில் நாம் என்ன செய்யவேண்டும் என்பதையும் கவனித்தல் அவசியம்.

ஹிந்து என்பவன் யார்? பாரதத்தை எவன் தாய்நாடாகவும், புண்ணிய பூமியாகவும் கருதி நடக்கிறானோ அவனே ஹிந்து. ச்ருதி, ஸ்ம்ருதி சாஸ்திரங்களில் ப்ராமாண்ய புத்தி கொண்டு, அவைகளில் கூறப்பட்ட தர்மங்களில் எவன் விசுவாஸம் வைத்து நிஷ்டைகள் செய்கிறானோ அவனே ஹிந்து.

ஆகையால் எவன் ஹிமாலயத்திலிருந்து குமரிவரையிலுள்ள பூமியையும், நதிகளையும் தன்னுடைய புண்ணிய பூமியாகவும், தன்னுடைய புண்ணியநதிகளாகவும் கருதுகின்றானோ, எவன் பசுவைத் தெய்வமாக மதித்துப் பூஜிக்கின்றானோ, எவன் **'अहिंसा परमो धर्मः'** என்றபடி சாஸ்திரவிருத்தமாக ஹிம்ஸையைச் செய்யாமலிருக்கின்றானோ, எவன் பாபபுண்ணியத்தைப் பற்றிக் கூறும் தர்மசாஸ்திரங்களிலும், வேதங்களிலும், வேதாந்த சாஸ்திரங்களிலும் நம்பிக்கை வைத்திருக்கிறானோ அவன் ஹிந்து. இப்பொழுது இருக்கும் ஹிந்துசட்டம் கூட ஹிந்துவைப்பற்றி விளக்கும்போது, 'ஹிந்து என்பவன் வேத தர்மசாஸ்திரங்களில் கூறியபடி எவனொருவன் வைதிக தர்மத்தில் விசுவாஸம் வைத்திருக்கிறானோ அவன்தான்' என்று விளக்குகிறது.

ஹிந்துவைப் பற்றி விளக்கினோம். ஹிந்து நாகரீகம் என்பது என்ன? உயர்ந்த பண்பாடுகளுடன் கூடிய பழக்க வழக்கங்களே நாகரீகம் என்பது. சாஸ்திர ஸம்மதமான செய்கை தான் நாகரீகம் எனக்கூறலாம். இதுதான் ஹிந்துமதத்தின் நாகரீக தத்துவம். இங்கே செய்கைக்கு வைதிக நடைமுறை பாவனைகள் என்று பொருள் கொள்ளவேண்டும். சாஸ்திரங்களை அனுசரிக்காத பழக்க வழக்கங்களிருந்தால் அது உயர்ந்த நாகரீக சமுதாயமாகாது. சாஸ்திரம் மட்டும் படித்துவிட்டு, பழக்கத்திலே அதைக் கொள்ளாமல் இருந்தால் அதுவும் நாகரீகம் ஆகாது. ஹிந்துமதத்திலோவெனில், ஸித்தாந்தமும், ஆசாரமும் மனிதனுடைய நாகரீகத்தில் பிரிக்கமுடியாதபடி அமைந்திருக்கின்றன. ஸித்தாந்தமென்பது, காவியங்கள், வேதங்கள், தர்மசாஸ்திரங்கள், வேதாந்த சாஸ்திரங்கள் முதலியவைகளின் தீர்ப்பு. மனிதனுடைய நாகரீகம் தர்மசாஸ்திரங்களில் கூறியுள்ளபடி இருந்தால்தான் அது சீர் கெடாமல் இருக்கும். இல்லையேல் அந்த நாகரீகம், பௌத்த ஸமுதாயத்தைப் போலும், ஜைனஸமுதாயத்தைப்போலும் நம் நாட்டில் அழிந்துவிடும். ஆக சாஸ்திரங்களினால்தான் மனிதன் ஆசாரத்தைத் தெரிந்து கொள்கிறான்.

நான் யார்? எங்கிருந்து வந்தேன்? எங்கு போகிறேன்? இந்த விச்வத்தின் உண்மையான ஸ்வரூபம் எது? இதனுடைய முதல்வன் யார்? சேதனாசேதனங்களின் உருவம் எது? இதுபோன்ற கேள்விகளுக்கு விடைகளை வேதாந்த சாஸ்திரங்களில்தான் காணலாம். அந்த வேதாந்த சாஸ்திரங்களில் கூறியபடி கொஞ்சமும் அதனின்றும் பிறழாமல் தன்னுடைய வாழ்க்கையை வகுத்துக்கொண்டிருப்

பததான் ஹிந்துசமுதாயம். அதனுல்தான் மனுவைப்போன்றும், வியாஸரைப்போன்றும் அறிஞர்களையும், கர்ணனைப்போன்ற கொடையாளிகளையும், ஹரிச்சந்திரனைப் போன்ற சத்தியஸந்தர்களையும், சாவித்திரி, நளாயினி போன்ற கற்புக்கரசிகளையும், ஸ்ரீபாஷ்யகாரர், சங்கரர், ஆநந்ததீர்த்தர் போன்ற ஆசார்யோத்தமர்களையும் பெற்றிருக்கிறது ஹிந்து மதம். அதனுலேதான் அது தனக்கு நேர்ந்த இவ்வளவு ஆபத்துக்களையும் சமாளித்துக் கொண்டு புனிதத்தன்மையுடன் விளங்குகிறது.

ஹிந்துவைப்பற்றியும், நாகரீகமென்பதைப் பற்றியும் அறிந்தபிறகு, ஹிந்துநாகரீகம் என்பது, வேத, வேதாந்த, தர்மசாஸ்திரங்களில் கூறப்பட்டபடி ஆசார விசாரங்களைக் கொண்டது என்று சுலபமாகக் கூறிவிடலாம். மேற்கூறியபடி வகுக்கப்பட்டிருக்கும் ஆசாரானுஷ்டானங்களைக் கவனியாமல் பௌத்தனும், நவீந சீர்திருத்தவாதிகளும் 'சீர்திருத்தம்' என்ற கடப்பாரையால் இச்குன்ரு அகழியுடன்கூடிய கோட்டையான ஹிந்துமதத்தை இடித்துவிட முயற்சித்தார்கள் — முயற்சிக்கிருர்கள்.

ஹிந்துநாகரீகத்திலுள்ள ஒவ்வொரு ஹிந்துவும் என்ன செய்கிருன்? ஹிந்துநாகரீகத்திலே சூரியனைப் போன்ற தேஜஸ்ஸுடன் கூடியிருந்த முனிகளும், யோகிகளும், ஆசார்யோத்தமர்களும்கூறியபடி நடந்துவருகிருன் அவன். நான் யார்? முதலான கேள்விகளுக்கு மஹரிஷிகள் கூறிய விடைகளை அறிந்து. அதன்படி பரப்ரஹ்மமான பகவானைப் பூஜிக்கிருன். அந்த பகவானைப் பூஜிக்கும் பாகவதர்களை அர்ச்சிக்கிருன். அவன் துக்கத்தைச் ஸஹிக்கும் தன்மையைப் பெற்றிருக்கிருன். ஆனுல் தக்கத்தைக் கொடுக்கும் தன்மையை அறியவில்லை. ஆயிரம் வருஷங்களாக மிலேச்சர்களுடைய இன்னல்களினின்றும் தன்னையும், தன் சமுதாயத்தையும் மனம் தளராது காப்பாற்றி வருகிருன். இவன் தன்னுடைய ஆத்மாவின் அமரத்வத்திற்காகப் பாடுபடுகிருன். கடைசியில் ஆத்மாவின் அமரத்வத்திற்காகவே பாடுபட்ட அவன், அந்த அமரத்வத்தை அடைகிருன். எவ்வளவு உயர்ந்த நாகரீகமென்பதை நாம் யோசிக்கவேண்டும்.

இன்னும் பாருங்கள்! சாதாரணமாக ஒரு சின்ன விஷயத்தை எடுத்துக்கொள்வோம். ஹிந்துநாகரீகத்தில் முக்கியமானது பெரியோர்களை நமஸ்கரித்து, அபிவாதனம் செய்தல். இந்த ஸாஷ்டாங்க நமஸ்காரம் வேறு எந்த மதத்திலும் கிடையாது. இது எவ்வளவு அழகாகக் கூறப்பட்டிருக்கிறது.

अभिवादनशीलस्य नित्यं वृद्धोपसेविनः ।
चत्वारि तस्य वर्धन्ते आयुर्विद्या यशो बलम् ॥

பெரியவர்களைத் தினமும் வணங்கி அபிவாதனம் செய்பவர்களுக்கு ஆயுள், வித்யை, பலம், கீர்த்தி இந்த நான்கும் வளருகிறது என்பது இதன் பொருள். ஒரு ஹிந்து மற்ருெரு ஹிந்துவைப் பார்த்தால் 'நமஸ்தே' என்கிருன். உன்பொருட்டு நமஸ்கரிக்கின்றேன் என்பது இதன் பொருள். இது எவ்வளவு இனிமையான அழகுடன் விளங்குகிறது! ஒரு ஆங்கிலேயனுன கிறிஸ்துவன் மற்ருெருவனைப் பார்த்தால் 'குட்மார்னிங்' (நல்ல காலை) என்கிருன். ஒரு இஸ்லாமியன் மற்ருெருவனைப் பார்த்தால் 'ஆதாம் அர்ஸ்' (உலகம் நன்ருக இருக்கிறது என்று பார்ஸியில் பொருளாம்) என்கிருன். ஆக இந்த சாதாரணவிஷயத்திலேயே ஹிந்துநாகரீகத்தின் உயர்தன்மையை அறியலாம். சுருக்கமாகக் கூறவேண்டுமானுல் ஹிந்துமதத்தைப் பின்வருமாறு கூறலாம். ஆசாரத்திற்கு மூலம் சாஸ்திரம். சாஸ்திரத்திற்கு மூலம் வேதம் என்று இருக்கின்றன.

இப்படிப்பட்ட உன்னதமான ஹிந்துமதத்திற்கு இப்போது கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இன்றைய ஹிந்து தர்மசாஸ்திரங்களின்படி தன்னுடைய நாகரீகத்தை வளர்க்க முற்படவில்லை. சிகையானது தர்மசாஸ்திரங்களில் முக்கியமாக ஒவ்வொரு ஹிந்துவிற்கும் கூறப்பட்டுள்ளது. அதை அவன் வைத்துக்கொள்வதில்லை சாஸ்திரங்களில் கூறியுள்ளபடி அவன் உடை தரிப்பதில்லை. ஸந்தியாவந்தனதிகளையும், இதர தர்மக்ரியைகளையும் அவன்

விட்டுவிடுகிறான். இங்கே ஓர் உண்மையை நாம் அறியவேண்டும். ராவணன் காலத்திலும் ஹிந்துமதத்திற்குக் கஷ்டங்கள் நேரிட்டன. மற்றும் அநேக ஸமயங்களில் அதற்குக் கஷ்டங்கள் நேரிட்டன. ஆனால் அந்தந்த காலங்களில் ரிஷிகளும், யோகிகளும் அவ்வளவு கஷ்டங்களிலும் மனந்தளராது தங்களது தர்மங்களைப் பாதுகாத்துவந்தனர். அதனால் அப்போது ஹிந்துமதத்திற்கு ஹானி ஏற்படவில்லை. ஏன் ஸமீபத்தில் ஆயிரம் வருஷங்களாக மிலேச்சர்களுடன் போராடிவந்தோமே, அப்போதும் நாம் நம்முடைய ஸநாதன தர்மங்களைக் கைவிடவில்லை. இப்போது சுமார் நூறுவருஷங்களாக நம்முடைய ஹிந்துமதத்திற்கு இந்த க்ஷீணிக்கத் தகுந்த நிலை ஏற்பட்டுள்ளது. காரணம் நாம்தான். இதற்கு நம் ஸம்பிரதாயஸ்தர்கள் ஒன்றுசேரவேண்டும். அனைவரும் கூடி சிகை, புண்ட்ரம் முதலிய சின்னங்களின் மஹிமையையும், ஆவச்யகதையையும், இவைகளைத் தரிக்காவிட்டால் பாபத்தையும் எடுத்துக் கூறவேண்டும். அதனால்தான் 'ஓர் ஹிந்து' என்ற உணர்ச்சி ஒவ்வொருவனுக்கும் ஏற்பட்டு, தர்ம சாஸ்திரங்களின்படி நடக்க முயல்வான்.

இதற்கு அடுத்தபடியாக, இப்பொழுது 'மதசார்பற்ற அரசாங்கம்' என்று கூறிக்கொள்ளும் அரசாங்கந்தான் இன்றைய நவீன சீர்திருத்தங்களுக்குக் காரணம். இங்கிலாந்திலே பார்லிமெண்டிலே ஓர் மதசம்பந்தமான சட்டம் கொண்டுவரவேண்டுமானால், அரசாங்கம் சாதாரணமாகக் கொண்டுவந்துவிடாது. முதலில் அது மதத்தலைவர்களின் அபிப்ராயங்களைக் கேட்கும். அவர்கள் அங்கீகரித்தால்தான் அது சட்டம் பூர்வாங்கமாகப் பாராளுமன்றத்தில் வரும். அவர்களின் விருப்பப்படிதான் சட்டத்தின் எல்லா கோட்பாடுகளும் இருக்கும். ஆனால் இங்கேயோ நிலைமை அப்படி இல்லை. அரசியல் நிர்ணய சட்டத்தைத் திருத்தவோ, ஹிந்துமதத்தின்மீது சட்டங்களைத் திணிக்கவோ அவகாசம் இவர்களுக்குத் தேவையில்லை. எல்லா சட்டமும் ஹிந்துமதத்தை 'சீர்திருத்தம்' என்று வேறு சொல்லிக்கொள்கிறார்கள். பல சீர்திருத்தவாதிகள் கோவில்களிலிருந்தும், மட தர்மஸ்தாபனங்களிலிருந்தும், அவைகளின் பணத்தை எடுத்து வேறுவிதங்களில் செலவு செய்யவேண்டும் என்று கூறுகிறார்கள். இதுதான் இன்றைய ஹிந்துவின் நிலை.

ஆனால் இந்தநிலை நீடிக்காது. ராவணன் எவ்வளவோ அம்சங்களில் உயர்ந்தவனாக இருந்தும் ஹிந்துஸநாதனதர்மத்தை அழிக்க முற்பட்டு அவன் அழிந்ததைப் பார்க்கிறோம். பௌத்தமதத்தின் 'சீர்திருத்தத்திலிருந்து' ஹிந்துமதத்தைக் காப்பாற்ற, பகவான் பாஷ்யகாரராக அவதரித்தது நமக்குத் தெரியும். இம்மாதிரியான நிலையை பகவான் நெடுநாள் பொறுக்க மாட்டான்.

அவன்,

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत।
अभ्युत्थानमधर्मस्य तदाऽऽत्मानं सृजाम्यहम्॥
परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम्।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे॥

என்று கீதையில் கூறியபடி அவதரித்து ஹிந்துமதத்தைக் காப்பாற்றுவான். புராதந ஹிந்துநாகரீகத்தைப் பல வழிகளில் அழித்துவிடலாம் என்று பகற்கனவு காண்பவர்களைப் பற்றி 'ஐயோ பாவம்!' என்று சொல்வதைத் தவிர வேறு என்ன கூறமுடியும்?

ஸ்ரீ:

ஸ்ரீ விசிஷ்டாத்வைதாவதாரம்

'அழகியான்தானே, அரியுருவம்தானே' என்றபடி ஸ்ரீமதஹோபிலமட திவ்யாஸ்தானத்தைத் தற்காலம் அலங்கரிப்பவரும் ஸ்வயம் த்ரய்யந்த ஸித்தாந்தமாய் ப்ரகாசிக்கும் அருள்மாரியுமான ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமங்களைப் படிக்கப் படிக்க, அல்பஜ்ஞனை அடியேன் உள்ளத்தில் நம் ஸ்வாமி ஓர் விலக்ஷணமான விசிஷ்டாத்வைதாவதாரந்தான் என்ற உணர்ச்சி எழுகின்றது. உண்மையான வேதாந்தமாய் பரமார்த்த ப்ரமாணங்களையடிப்படையாய்க்கொண்டு நிர்தோஷமாய், லோகஹிதகரமாய் பரமவைதிகதர்சனமுமான நம் விசிஷ்டாத்வைதமே இப்பரமாசார்யரூபமாயவதரித்து, முக்தி மழை பொழியும் முகிலாய் உற்றாரைக் காக்கவும், மாற்றாரைத்திருத்திப் பணிகொள்ளவும் ஞானப்பிரானுன சிங்கப்பிரானுேடும், கண்ணனுேடும்தம்பரமென்றுதளராமனத்துடனும், அதிமானுஷச் செயல்களுடனும் ஸஞ்சாரம் செய்து வருகிறதென்று நாமநுபவிக்கவேண்டும். 'அருள் கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே' என்று 'அருள் கொண்டாடும் அடியவர் இன்புற' 'ஸ்வாதீந- வ்ருஷகிரீசம்' 'த்ருடதயா யந்த்ர, யந்த்ரித:' என்றவாறு தன் தயைக்குத் தானே வசப்பட்டவராய் நம் ஆளரி எம்பெருமான் 'தன்னகலமகலாத தகவோடு, அடைபவர் தீவினை மாற்றி அருள் பொழிய இப்பாரதகண்டத்தில் நம் பாக்யவசத்தால் ஊருராய் ஸஞ்சரிக்கிறார் போலும். போதமரும் திருமாதுடங் நின்ற புராணனும் பரிமுகப்பரமனுமான சிங்கவேள் குன்றத்தான் பிரதம குருவாய் நமக்கு சாஸ்திரங்களையளித்தான் அச்சுருதியினின்று தியினிதயமே விசிஷ்டாத்வைதம். இவ்விசிஷ்டாத்வைதத்தின் சுடர் 'பாவித்யை'. 'பாதுகாம் தேவீம் பாவித்ர்யாமிவ ஸ்வயம்' (ஸ்ரீபாதுகாஸஹஸ்ரம்) என்றவாறு பாவித்யையின் ரூபமே பாதுகையாயிற்று. இப்பாதுகைதான் அழகியசிங்கரென்ற ஸதாசார்ய அவதாரமாய் தற்காலம் விளங்குகிறது. ஆதலின் நம் ஸ்வாமி விசிஷ்டாத்வைதாவதாரந்தானென்று ப்ரமாணதமம்.

(2) 'ஜைத்ரயாத்ராமபதிச்ய பவத்யா வர்த்மநி ரமதே' (பாதுகாஸஹஸ்ரம்) என்று நம் தேசிகோத்தமன் அநுபவித்தபடி, தன் பாதுகையோடு ஒவ்வொரு காலங்களில் விளையாடும் ந்ருஸிம்ஹன் தன் திருவிக்ரமாவதாரத்தை விஞ்சியவராய்,

> 'ஜ்ஞானஸ்ய கோ அவிஷய: அச்யுத!
> கருணையாஸ்தவ கோ தூரஸ்தித:, ।
> சக்த்யா கோ அதிபா:, தஸ்மாத் கலு
> பாயஸ்த்வமேவ ஸ்வயம் ஸித்த:
>
> (அச்யுதசதகம்)

என்றபடி, தான் ஸித்தோபாயனென்று காட்டிக்கொண்டு 'ஸலாகவா தௌச்விஷ்டா' என்று சிரமத்தை சிறிதளவும் அறியாமல் த்வரையோடும் கார்யஸமர்த்தமாகவுமிருக்கும். நம் விசிஷ்டாத்வைதாவதாரத்துடன், யாத்ரை செய்ய ஸங்கல்பித்திருக்கிறுமென்று தெரிந்து கொள்ளுகிறோம். அழகியசிங்கரும் வண்மையினுலும் தன் மாதுகவாலும் மதிபுரையும் தண்மையினுலும், தாரணியோர்க்குத் தான் சரணுய், 'அஸ்ய ஸ்ரீ பகவத:' என்று கையில் கனியென்ன கண்ணனைக் காட்டித் தந்து அடியார்களின் துயரகற்றி, தமிமம் ஸர்வஸம்பந்நமாசார்யம்' என்றபடி ஆத்மோஜ்ஜீவனார்த்தமாக சேதனர்களாச்ரயிக்கத்தக்க ஆசார்ய பீடத்திலெழுந்தருளி அநுக்ரஹம் பண்ணிக் கொண்டு வருகிறார்.

3. வேதாத்மகன் சிரஸிலும் அனந்தன்மடியிலும், ஸேனைபதியாழ்வாரின் பிரம்பின் கீழும் பிராட்டியின் கடாக்ஷத்திலும் வளரும் வானிளவரசான ஸர்வஸ்மாத்பரன் காருண்யரஸத்தை வர்ஷித்துக்கொண்டு இக்கலியில் ஸஞ்சாரம் செய்வது ஒரு ஸாஹஸ ஸங்கல்பமென சிலர் நினைக்கக்கூடும். இவ்விதம் தன் மன்னருளால் அவன் வரித்திட்ட வகையை அவனடியிரண்டையுமடையுமென்பர்கள் தானறிவார்கள். ஸங்கல்பகர்ணதாரனுன எம்பெரு

மானின் ஸௌகுமார்யாதிகளை நினைத்து ப்ரேமையினால் அவன் ஸஞ்சாரத்தைப்பற்றி விசாரப்படுபவர் அவன் சௌர்ய வீர்யாதிகளையநுஸந்தித்து தங்கள் மனக்கலக்கத்தைப் போக்கிக்கொள்ளவேண்டும். தன் பரத்வத்தைக் காட்டிக்கொடுக்கும் அர்ச்சைகளுடனும் தன் ஸௌலப்யத்தைத் தெரிவிக்கும் விசிஷ்டாத்வைதாவதாரமான அழகியசிங்கருடனும் ப்ராஸதநீயனான பகவான் ஜ்ஞானம் கனிந்த நலம் கொண்டு ஆசார்யக்ருத்யம் செய்துவருகின்றானல்லவா.

4. கருதவரந்தரும் கீதோபநிஷதாசார்யன் தன்னைச் சரணமடைந்த பார்த்தனுக்கு தன்னைக் காட்டி ருசி உண்டாக்கி ஸாரார்த்தங்களை போதித்தான். பரமகாருணிகரான நம் முக்கோல் பகவரோ எம்பெருமானாரைப்போல் செவி தாழ்த்தியவர்க்கெல்லாம் ஆத்மகுணபூர்த்தியுண்டாக்கி திருமாலடிகாட்டி வானேறவழி தந்து விளங்குகின்றார். ‘ஆரொப்பார் இவர் குணங்கள் அனைத்தும் கண்டால் அருளாளர் தாமெனினும் தமக்கொவ்வாரே’ என்றபடி இத்தனித் தருமம் திருவுள்ளங்கொண்டது தன் பகவதநுபவப்ரீதிபரீவாஹாபேக்ஷையால் போகஹேதுவாகவும் தன் கருணைக்குப் போக்குவீடாயும் அடியார்களைத் தேடிச் செல்வதாகும். ஸேனாபதியாழ்வாரின் வேத்ரஸாரமான இவரது த்ரிதண்டம் இம்மஹானின் மஹோந்நத தத்வநிஷ்டையையும், முக்கரணத் தூய்மை பக்திகளையும், மூன்று தத்வரஹஸ்யங்களையும், கர்ம, பலகர்த்ருத்வ, த்யாகங்களையும் நமக்குக் காட்டிக் கொடுத்து கழல் பணிந்தாரின் ‘கடிசூடு’ மூன்றையும் போக்கிட உலகத்தில் யதார்த்தஜ்ஞானத்தை ப்ரகாசப்படுத்தி வருகிறது.

5. பகவத்பரராய் பகவதேகோபாயராய் ஸர்வபூதஸுஹ்ருத்தாய் விசுத்தவித்யாவிபூஷணராய், ஆத்மகுணமே வடிவாய், ஸஞ்சாரசீலத்தோடு எழுந்தருளியிருக்கும் நம் ஸ்வாமியின் விஜயயாத்ரைக்கு பரதத்வநிர்ணயத்தையோர் ப்ரயோஜனமாகக் கொள்ளக் குறையில்லை. கலியின் கொடுமையால் தர்மம் குன்றி, ஆசாரம் மெலிந்து, பகவத்பக்தி வற்றிப்போய் சதபூஷணிகள் தோன்றி ஸாதுக்களுக்கு மனக்கலக்கத்தையுண்டாக்கும் இக்காலத்தில் சிறியார் மாயா வழிகளையழித்து அடியவரான அறிபார் திறத்தில் தீங்கு கழித்து இத்திணியிருளை நீக்கி கிண்மை தரும் தெளிவையளிக்க நம் பரமாசார்யரால்தான் முடியும். வேதங்களும், அவைகளின் நினைவுகளும் ஸர்வஸ்மாத் பரமம் யத், யஸ்மாத் பரமம் நகிஞ்சிதப்யஸ்தி, குணத: ஸ்வரூபதோ வா, தத்ப்ருஹ்ம ஸ்ரீநிவாஸநாமா பஜே’ என்று உத்கோஷிக்கும் தத்வார்த்தங்களை போதிக்கத்தான் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனின் அவதாரமான ஸ்ரீ அழகியசிங்கர் ஸஞ்சாரம் செய்வது தான் எழுந்தருளியவிடமெல்லாம் எம்பெருமானுக்கு மங்களாசாஸனம் செய்து பூமியின் மாலிந்யத்தைப்போக்கி கூழாட்பட்டு நிற்பவரை வாழாட்படுத்தி வருவதை யாவரும் அறிவார்கள். மேலும்,

அநுகல்பபூதமுபாபித்பதம் ஸதாம்,
அஜஹத் த்ரிவர்க்கமபவர்க்கவைபவம்,
சலசித்தவ்ருத்திவிநிவர்த்தநௌஷதம்,
(யதிராஜஸப்ததி)

போல் அடியார்களிலிருவினைகளையுமிதமோடகற்றி, ‘கமலமுகந்த கடற்கிடைக்கடல், கருணையுகந்த திடர்க்கொருக்கினர்’ என்ற விதம். தன்னையடைந்தவரை பகவான் கருணைக்குப் பாத்திரமாக்கிவருகிறாரென்பது ஒவ்வொருவருமநுபவித்த விஷயம். இன்னும் நம் தர்சனத்திற்கும் வைஷ்ணவஉலகிற்கும் நம் ஸ்வாமி அருளிச்செய்யும் மஹோபகாரங்களைப்பற்றிச் சொல்லமுடியாது. பகவான் முதல் எல்லா ஆழ்வாராசார்யர்களின் கிருபையால் நமக்குக் கிடைத்த இப்பிரானுக்கு,

சத்துவமளித்த காரிமாறனே,
புத்துயிரளித்த நாதநாதனே,
புருடனைப் போற்றிய யாமுனமுனியே,
சுருதி புகட்டிய யதிவாரிதியே, என்றும்,
மறைமுடி குருவாய் கருணையே வடிவாய்,
வாதிசிங்கமாய்வந்த வேங்கடத்துறைவனே,
என்றும்,
ஆளரிப் பரனேயவன் பொற்பதநிலையோ,
ஆதிவண்சடகோப அண்ணல்தானே, என்

றும் பல்லாண்டு பாடுவதுதான் ஜன்மஸாபல்யமான நாம் செய்யும் பணி.

6. ஸதாசார்யர்களின் உபகாரங்களில் சிலவற்றைப்பேசி, அவர்களின் கல்யாணகுணங்களையும் ப்ரபாவங்களையும் இவ்விடத்தில் அநுஸந்தானம் செய்யலாம்.

‘ஸ்வாதீநசேஷஸத்தாஸ்திதியதன பலம் வித்தி லக்ஷ்மீசமேகம், ப்ராப்யம் நாந்யம் ப்ரதீயா: ந ச சரணதயா கஞ்சிதந்யம் வ்ருணீயா:’ (ந்யாஸவிம்சதி) என்ற ஆசார்யர்கள் உபதேசத்தை ஏகசித்தத்துடன் நாம் ஹ்ருதயத்தில் தரித்துக்கொண்டு எம்பெருமானைச் சரணமடைந்தால் புநராவ்ருத்தியில்லாத பேரடிமைக் கவனிடம் அன்பு பெற்றுவிடுவோம். ஸர்வசேஷியும், ஸர்வசரீரியும், ஸமஸ்த கல்யாணகுணபரிபூர்ணனும், ஸர்வபந்துவுமான பரதத்வம் ஸ்ரீமந்நாராயணனென்று அவனை நம் ஸதாசாரியர்கள் ஆச்ரயித்துக்காட்டி அவன் திருவடிகளை சரணமென்று அவலம்பித்துக் காட்டி, தங்கள் அநுஷ்டானத்தாலே பரதத்வத்தையும், பரமோபாயத்தையும், பரமபுருஷார்த்தத்தையும் ப்ரகாசப்படுத்திக்கொண்டு ‘ஜயந்தி புவி ஸந்த:’ என்று விளங்குகிறார்கள். லோகவேதஸத்ப்ரமாணங்களுக்கும் ததநுஸாரியான ஸமீசீன யுக்திகளுக்கும் ஒத்தபடி தத்வஹித புருஷார்த்தங்களை உள்ளபடியே ப்ரதிபாதிக்கும் ஸச்சாஸ்த்ர உபப்ருஹ்மணங்களான பூர்வாசார்யர்களின் திவ்யஸூக்திகளை உலகமெல்லாம் அறிந்து கொண்டாடி பரதேவதையான பரமபுருஷனையே ஆச்ரயித்து இஹபரங்களிரண்டிலும் பரப்ருஹ்மாநுபவத்தையும் கிங்கரத்வாதிராஜ்யத்தையும் பெற்று எல்லோரும் பகவத்பரர்களாக விளங்கவேண்டுமென்று நம் ஸதாசார்யர்கள் பரம கிருபையோடு அரும்பாடுபட்டுவருகிறார்கள். ஆசார்யர் மூலமாகத்தான் பெருமாள் லோகத்தைக் காப்பாற்றி வருகிறார். எப்பேர்ப்பட்ட பாபியும் ஆசார்யகடாக்ஷம் பெற்றானானால் ஸத்வகுணம் மேலிட்டவனாய் பகவானை த்யானிக்கிறான். ஆசார்யக்ருபைக்குப் பாத்திரமானவனிடமும் எம்பெருமான் தானே சென்று இஹபரஸுகங்களையளிக்கிறான். ஸதாசார்யனையே அநந்யகதியாக நம்பியிருக்கிற அநந்யபக்தர்களுக்கு பக்தி விரோதிகளும் அநுபவவிரோதிகளுமான பாபங்கள் ஸதாசார்யகடாக்ஷத்தாலேயே போய்விடும். அந்திமதசையில் பகவத்ஸாக்ஷாத்காரமும் ஏற்படும்.

7. ‘யஸ்யாஸௌ பஜதே கதாசிதஜஹத் பூமா ஸ்வயம் பூமிகாம், மக்னானாம் பவிநாம் பவார்ணவஸமுத்தாராய நாராயண:’ என்றபடி. (ஸங்கல்பஸூர்யோதயம்)

பகவான் ஆசார்யவேஷத்தையடைந்து தான் ஜீவனைக் கரையேற்ற வேண்டியிருக்கிறது. ஆசார்யனைக் காட்டிலும் வேறுபட்ட பரதேவதையாகிய பகவானையும் இந்த லோகத்தில் மேல்பட்டதாக நாம் நினைக்கவேண்டாம். ஸகலவித புருஷார்த்தங்களும் ஆசார்யஸம்பந்தப்ரபாவத்தாலேயே ஸித்திக்குமென்பதில் யாதொரு ஸந்தேஹமுமில்லை. ஸதாசார்யர்களைக் காட்டிலும் நமக்கு உயர்ந்தவர்களும் உத்தேச்யர்களும் வேறொருவரில்லை. அவர்களை உபாஸிப்பதே உபாயகாஷ்டையும் அவர்களுக்குச் செய்யும் கைங்கர்யமுமே புருஷார்த்தகாஷ்டையுமாகும். ஸதாசார்யர்களை பரதேவதையாகவும் பரதனமாகவும் கொண்ட ஸாத்விகோத்தமர்கள் வேதசாஸ்திரத்திற்கு குமதிகளாலும் வேதபாஹ்யர்களாலும் ஏற்படும்ஸர்வகஷ்டங்களையும் போக்கிக்கொண்டு ஸம்ஸாரரூபமான சத்ருவை ஜயித்து மேன்மை பெற்று வாழ்வார்களென்பது நிச்சயம்.

ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகனின் திருவடி ஸம்பந்தம் பெற்ற நாமெல்லோரும் அக்குரு மாமணியின் பின்வரும் நல்லுபதேசத்தை மறக்காமல் ஒன்றுபட்டு வாழ்வோமாக

ஆபாதசூடமநபாயிநி தர்சநேஸ்மின்,
ஆசாஸநீயமபரம் ந விபக்ஷஹேதோ: ।
ஆபாதசாந்திமதுரான் புநரஸ்மதீயான்,
அந்யோந்யவைரஜனனீ விஜஹாத்வஸூயா ॥

ஸ்ரீ:

பகவதாராதனம்

(6-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஸாளக்ராமத்தின் உத்பத்தி

ஒரு ஸமயம் ப்ரஹ்மா இக்கர்மபூமியில்உள்ள பாபிகள் நற்கதியடையும் மார்க்கத்தைப்பற்றி யோசித்துக்கொண்டு கவலையோடிருந்தார். அப்பொழுது அவர் கன்னத்தில் வேர்வை உண்டாயிற்று. அந்த வேர்வை ஜலத்திலிருந்து ஒரு பெண் உண்டானாள். கண்டத்திலிருந்து உண்டானதால் கண்டகீ என்று அப்பெண்ணுக்குப் பெயர் உண்டாயிற்று. அவள் தவம் செய்துவந்தாள் அவளுடைய தபஸ்ஸின் கொடுமை தாங்காமல் உனக்கு என்ன வரம் வேண்டும் என்று தேவர்கள் அவளைக் கேட்டார்கள். அதற்கு எல்லா தேவதைகளும் எனக்குப் புத்ரனாகப் பிறக்கவேண்டும் என்றாள். அம்மாதிரி வரம் தர அவர்களால் முடியவில்லை. உடனே அவள் கோபங்கொண்டு என்னுடைய தபஸ்ஸிற்கு பலன் கொடுக்க மறுத்ததனால் எல்லா தேவர்களும் புழுவாகக் கடவது என்று சாபமிட்டாள். பிறகு தேவதைகளும் எங்கள் மஹிமையறியாமல் கர்வத்துடன் சாபமிட்டதால் நீயும் ஜடமாகக்கடவது என்று ப்ரதிசாபமிட்டார்கள். இவ்விதம் கலவரம் உண்டாகவே ப்ரஹ்மா, ருத்ரன், இந்திரன் முதலியவர்கள் விஷ்ணுவினிடம் சென்று முறையிட்டார்கள். அதற்கு பகவான் ‘தேவதைகளே! கேளுங்கள். இரண்டு ப்ராஹ்மணர்கள் சாபத்தால் யானையாகவும் முதலையாகவும் ஆகி மோக்ஷத்தையடையப்போகின்றார்கள். அந்த யானையின் சரீரத்தின் மேதஸ்ஸிலிருந்து வஜ்ரகீடம் என்னும் புழுவாக நீங்கள் பிறக்கவேண்டும். கண்டகியும் அதிக மஹிமையுள்ள புண்யநதியாக ப்ரவஹிக்கப் போகின்றாள். இதற்கு பத்து யோஜனை தூரத்தில் சக்ரதீர்த்தம் என்று ஒரு தீர்த்தமிருக்கின்றது. அதில் நான் வஸிக்கப்போகின்றேன். அங்கிருக்கும் சிலைக்கு ‘த்வாரகாசக்ரம்’ என்று பெயர். நீங்கள் இம்மலையின் கற்களில்மறைந்துகொண்டு இந்நதியில் வஸிக்கவேண்டும். இதனால் அவளுடைய அபீஷ்டமும் நிறைவேறும். இவைகளைத் தெரிந்துகொண்டு ஸாளக்ராமசிலை த்வாரகாசிலை இவைகள் இரண்டையும் சேர்த்தாராதிப்பவர்களுக்கு போகமோக்ஷங்கள் உண்டாகும்’ என்று சொல்லி பகவான் மறைந்துவிட்டார்.

பின்னொருகாலத்தில் கர்த்தமப்ரஜாபதிக்கு ஜயன், விஜயன் என்று இரு புத்ரர்கள் ஜனித்தார்கள். அவர்கள் தர்மசீலர்களாயும், அஷ்டாக்ஷராதிஜபபரர்களாயும் இருந்துவந்தார்கள். அவர்கள் பகவானை ஆராதித்து வந்தார்கள். அவர்களுடைய ஆராதனத்தினால் ப்ரஸன்னனான பகவான் தினந்தோறும் ஆராதனகாலத்தில் அவர்களுக்கு ஸேவை ஸாதித்துவந்தான்.

மருத்தன் என்னும் மஹாராஜா ஒரு யாகம் பண்ணினான். அந்த யாகத்தில் இவர்களில் ஒருவன் ப்ரஹ்மாவாகவும், மற்றொருவர் அத்வர்யுவாகவும் இருந்து யாகத்தை செவ்வனே பூர்த்தி செய்து வைத்தார்கள். மஹாராஜா இவர்களுக்கு ஸம்பாவனை செய்து அனுப்பினான். அந்த ரவ்யத்தை விபாகம் செய்துகொள்ளும் ஸமயம் இவர்களுள் மனஸ்தாபம் உண்டாயிற்று. மூத்தவன் ஸமமாகப் பங்கிடச் சொன்னான். இளையவன் அவரவர்களுடைய ஸம்பாவனை அவரவர்களுடையதே என்றான். மூத்தவனுக்குக் கோபம் உண்டாயிற்று லோபபுத்தியால் வாதாடுகிறபடியால் நீ முதலையாகக் கடவது’ என்று சபித்தான். இளையவன்–‘நீ மதத்தால் ஒன்றும் தெரியாமல் பேசுவதால் மதயானையாகக் கடவது’ என்று சாபமிட்டான். இருவரும் வீட்டிற்கு வந்து பகவதாராதனகாலத்தில் பகவானிடம் நடந்தவற்றை விண்ணப்பிக்க, பகவானும் ‘என் பக்தர்களான உங்கள் வார்த்தை வீணாகாது. ஆகையால் சாபத்தை அனுபவித்தே தீரவேண்டும். ஆனால் என்னுடைய அனுக்ரஹத்தால் பூர்வ ஜந்மஸ்மரணத்துடன் இருந்துவிட்டு என்னுடைய திருவடியையடைவீர்களாக’ என்று சொல்லி மறைந்துவிட்டார், மற்றவைகள் பக

வான் தேவதைகளுக்குச் சொல்லியபடி நடந்ததாக ஒரு கதை பெரியோர்கள் சொல்லக் கேட்டதுண்டு.

ஸாளக்ராமதானத்தின் மஹிமையைப் பற்றியும் ஒரு கதை கேட்டதுண்டு. பின் வருமாறு:— கோதாவரீதீரத்தில் ஒரு வைச்யன் இருந்தான். அவன் அதிக பணமுடையவனாகயிருந்தான். ஆகிலும் தானும் அதை அனுபவிக்கவில்லை. பிறர்களுக்கும் கொடுக்கவில்லை. ‚யோ ந ददாதி ந ஹுஜே ஸதிவிஹவெ நெவ தஸ்ய தத்வ்யம் । த்ருணமய க்ருதிரேவ ரக்ஷதி ஸஸ்யம் வர ஸ்யாயெ—’என்கிறபடி வைக்கோலினால்செய்யப்பட்ட புருஷனைப்போலிருந்துவந்தான். பிறரையும் தூஷித்தும் வந்தான். அவன் பக்கத்து க்ராமத்திலுள்ள வேத வேதாந்தம் கற்றறிந்த ப்ராஹ்மணனுக்கு வட்டிக்குக்கொஞ்சம் பணம் கொடுத்திருந்தான். சில மாதங்கள் கழிந்தவாறே அப் பிராஹ்மணோத்தமனைப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கும்படி கேட்டான். ப்ராஹ்மணச்ரேஷ்டனும் இன்னும் ஒருமாதத்தில் கொடுத்துவிடுவதாகவும் அதுவரை பொறுத்துக்கொள்ளும்படியும் வேண்டிக் கொண்டான். ‘அந்த வைச்யன் இப்பொழுதே கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் உம்மைக் கொன்றுவிடுவேன்’ என்று பயமுறுத்தினன். ப்ராஹ்மணன் வேறு வழியின்றி கலங்கி நின்றுகொண்டு மறுபடியும் மன்றாடினன். உடனே வைச்யன் அப் பிராஹ்மணனை கைகளாலும் கால்களாலும் அடித்து உதைத்துக் குத்திக் கொன்றுவிட்டான். பிறகு வீடு வந்துசேர்ந்தான். இதே கவலையால் பயந்துகொண்டு வீட்டினுள்ளேயே இருந்து வந்தான். அதனாலேயே இறந்தும் விட்டான். பிறகு அவனை யமபடர்கள் ரௌரவநரகத்தில்கொண்டு தள்ளிவிட்டார்கள்.

வைச்யனுக்கு தர்மஸாரன் என்றொரு பிள்ளையிருந்தான். அவன் மிகவும் தர்மிஷ்டனாய் கோவில், குளங்கள் கட்டியும், பசித்தவருக்கு அன்னமிட்டும் மிக தர்மிஷ்டனாயிருந்தான். அவனுடைய அத்ருஷ்டவசத்தால் ஒரு ஸமயம் நாரதமஹர்ஷி அவனிருப்பிடம் வந்தார். தர்மஸாரனும் அம் மஹர்ஷியை நன்கு உபசரித்தான். அதனால் அவரும் ப்ரீதராகி தர்மஸாரனைப் பார்த்து சில வார்த்தைகள் சொன்னார். ‚தர்மஸார! நான் மூன்று லோகங்களையும் சுற்றிவருகிறேன். அப்பொழுது உன்னுடைய தமப்பனை ரௌரவநரகத்தில் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கக் கண்டேன். அவன் ப்ரஹ்மஹத்தி செய்ததால் அவனுக்கு அந்நரகம் கிடைத்தது. அதிலிருந்து அவன் விடுபட ஒரு ஸாளக்ராமசிலை தானம் செய்வாயாக’ என்று கூறினர். இதைக் கேட்ட தர்மஸாரன் கோதானம், பூதானம், அன்னதானம், ஸ்வர்ணதானம் என்று அனேக தானங்களிருக்கின்றன. அவைகளால் பசி தீரும், தாகம் தணியும், அலங்காரமாக ஆபரணங்கள் செய்துகொள்ளலாம். வெறும் இச் சிறிய கல்லினால் என்ன பலன்? அப்பாபம்தான் நிவர்த்தியாகுமா? என்று கூறிவிட்டான். நாரதர் எவ்வளவு சொல்லியும் பலன் உண்டாகவில்லை. அவர் சென்றுவிட்டார். பிறகு பெரியோர் வார்த்தையைக் கேட்காததாலும், ஸாளக்ராமசிலையை அவமதித்ததாலும் தர்மஸாரனுக்கு அகாலமரணமுண்டாயிற்று. பிறகு பல ஜன்மங்கள் எடுத்து கடைசியாக ஒருதரித்ரப்ராஹ்மணனுக்குப் பெண்ணாகப் பிறந்தான். அவளுக்குத் தக்கவயதில் கல்யாணம் செய்துவைத்தான் அப் பிராஹ்மணன். சிறிது காலம் கழிந்தவாறே அப் பெண்ணின் புருஷனுக்கு அகாலமரணம் ஏற்படும்போலிருந்தது. உடனே இருவர்களுடைய ஜாதகங்களைப்பார்த்தான். பெண்ணின் ஜாதகத்தைப் பார்த்து அவளுடைய பாபத்தையறிந்து நல்லதோர் ஸாளக்ராமத்தை தானம்செய்தான். உடனே ஜாமாதாவும் பிழைத்தெழுந்தான். பிறகு வெகுகாலம் ஸதிபதிகள் ஸுகித்திருந்து நற்கதியையடைந்தார்கள் என்று. ஆகையால் ஸாளக்ராமத்தின் மஹிமையை அறிந்து திருவாராதனம்செய்வதுடன் தானத்தையும் மிக பக்திச்ரத்தையுடன் செய்யவும் வேண்டும்.

ஸ்ரீ:

என்னுடைய இன்னமுது

(16-வது ஸம்புடம் 6-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ப்ரியதர்சினீ:- நாத! இத்தீர்த்தத்தின் மஹிமையைச் சற்று விஸ்தாரமாகக் கூறுங்கள்.

மஞ்ஜுபாஷணன்:- கூறுகிறேன், கவனமாகவும் பக்திச்ரத்தையுடனும் கேள். இதன் பெயர் ஹ்ருத்தாபநாசினீ என்பதாம். அதாவது மனதின்கண் ஏற்பட்ட ஸமஸ்த தாபங்களையும் போக்கடிக்கக்கூடிய வல்லமை பொருந்தியது என்பது இதன் பொருள்.

ப்ரியதர்சினீ:- ஹ்ருத்தாபமாவது யாது?

மஞ்ஜுபாஷணன்:- ஹ்ருத்தாபமாவது:- **'एतं हवाव न तपति, किमहं साधु नाकरवं, किमहं पापमकरवमिति'** (பகவானின் திருவுள்ளத்திற்கு உகப்பாகும்படி விஹிதமான எந்த ஸத்கார்யங்களை நான் அநுஷ்டிக்கவில்லையோ, பகவந் நியமனத்திற்கு விரோதமான எந்த பாப க்ருத்யத்தை நான் செய்தேனோ) என்றும், 'நானே நாநாவிதநரகம் புகும் பாவம் செய்தேன்' என்றும் சொல்லுகிறபடியான நெஞ்சுருக்கம்.

மேலும் இப்புண்ய புஷ்கரிணீ கங்கை முதலிய புண்ய தீர்த்தங்களைக் காட்டிலும் மிகவும் மஹிமை வாய்ந்தது.

ப்ரியதர்சினீ:- கங்கை முதலியவைகளைக்காட்டிலும் இதற்கு எவ்விதம் ஏற்றமென்பதையும் சற்று விளக்குங்கள்.

மஞ்ஜுபாஷணன்:- ப்ரியே! கேள். 'गङ्गायां मौसलस्नानात्........., रेवायान्तु तथा स्नात्वा......, प्रातरारभ्य गण्डक्यामासायं स्नानमाचरेत्, गौतम्यां नियत स्नात्वा' என்று கங்கைமுதலான புண்யநதிகள் ஸ்நாநம் செய்யுமவர்களின் பாபதாபங்களையே போக்கடிக்க வல்லமை பொருந்தியன. இப்புண்யதீர்த்தமோவென்னில் அவ்வாறன்றிக்கே

दर्शनात्स्पर्शनात्स्नानात्सद्यो हृत्तापनाशनः ।
अतस्सर्वेषु लोकेषु नाम्ना हृत्तापनाशनः ॥

दर्शनात्सर्वहृत्तापनाशनः :— அசக்தனாகவுள்ள ஒருவன் இப்புஷ்கரிணியின் அருகே செல்லவொண்ணாமல் கண்ணுக்கு எட்டினவிடத்தில் இருந்து கண்ணைத் திறந்து இத்தீர்த்தத்தைப் பார்வையிட்டானாகில் அவ்வளவிலேயே நான்கு வித புருஷார்த்தங்களுக்கு விரோதிகளாய் ஹ்ருதய லக்னங்களான ஸமஸ்த தாபஹேதுவான பாபங்களையும் 'நம்மன்போலே வீழ்த்த முக்கும் நாட்டிலுள்ள பாவமெல்லாம் சும்மனாதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்தனவே' 'தீயினில் தூசாகும்' என்றும் சொல்லுகிறபடியே உருமாய்ந்துபோகும்படிச்செய்யும்.

स्पर्शनात् सर्वहृत्तापनाशनः :— எவனொருவன் இத் திருக்குளத்தில் இறங்கி ஸ்நாநம் செய்வதற்கு மட்டில் அசக்தனாய் தீர்த்தத்தைக் கையினால் தொட்டு ப்ரோக்ஷித்துக்கொள்ளுகிறானோ, அவனுடையவும் ஸகலமான பாப தாபங்களையும் போக்கடிக்கும். ஆகையாலேயே **स्पर्शनात् सर्वहृत्तापनाशनः** என்று சொல்லப்படுகிறது.

स्नानात् सर्वहृत्तापनाशनः :— மேலும் இவ்விரண்டு அதிகாரிகள்போலன்றிக்கே இத்தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்யுமவர்களுடைய பாபங்களைப் போக்கி நற்கதியையும், ஸத்ஸந்தான ஸம்ருத்தியையும் அவர்களுக்குக் கொடுத்து, அவர்களை எம்பெருமானுடைய திருவருளுக்குப் பாத்ரர்களாகும்படியாகவும் செய்கிறது,

இப்படி சக்தாசக்த அதிகாரிகளுடையவும் க்ருத்யாகரண அக்ருத்யகரணரூபமான ஸர்வ பாபங்களினால் ஏற்பட்ட தாபங்களைப் போக்கிவிடுகையாலும் இவ்வுலகின்கண் இத்தீர்த்தம் 'ஹ்ருத்தாபநாசநம்' என்கிற பெயரினாலேயே ப்ரஸித்தமாயுள்ளது. இப்படி பெயரிட்டுக் கொடிகட்டின புண்யபுஷ்கரிணீ வேறு எங்கேயும் கிடையாது. இப்படித் தன்னைக் கண்டு

தொட்டு ஸ்நாநம் செய்து வேண்டிக்கொள்ளு மவர்களின் இடர்களைப் போக்கி, அவர்கள் செய்கிற ப்ரதக்ஷிண ப்ரணாமாதிகளையும், தீப மாலைகளையும், கற்பூர ஹாரத்திகளையும், கணக் கில்லா வெல்லக்கட்டிகளையும் ஏற்றுக்கொண்டு விளங்காநிற்கிறது இம்மஹாபுஷ்கரிணீ.

ப்ரியதர்சிநீ:— ஆஹா! இவ்வளவு மஹிமை பொருந்திய புஷ்கரிணியைத் தர்சிக்கும் பாக் யம் நமக்கு இன்று கிடைத்தது நாம் செய்த பாக்யவிசேஷமே. மேன்மேலும் இதன் மஹி மையைச் சொல்ல, கேட்கவேண்டும் என்று பேரவா உண்டாகிறது.

மஞ்ஜுபாஷணன்:— உன் இச்சை பூர்த்தி யடையும்படி மேலும் இதன் ப்ரபாவத்தைக் கூறுகிறேன். இப்புண்யதீர்த்தத்தில் ஸக்ருத் ஸ்நாநமாத்ரத்தால் மிகக் கொடியதான பாபத் திலிருந்து விடுபட்டு மோக்ஷமடைந்தான் கௌசிகன் என்கிற ஓர் அந்தணன்.

ப்ரியதர்சிநீ:— அவ்வந்தணன் எப்படிப்பட்ட வன்? அவன் என்ன பாபத்தைச் செய்தான்? அவன் எவ்வாறு மோக்ஷம் அடைந்தான்?

மஞ்ஜுபாஷணன்:— முன்னொருகால் க்ருத யுகத்தில் ஸஜ்ஜனங்களைக்கண்டால் நிலவு தென் னலையுங் கண்டாப்போலே ப்ரீதியுடையவனை யும், நன்னடக்கையுடையவனையும், சமதமாதி குணங்களால் நிறைந்தவனையும், தாய் தந்தை யர்களின் சுச்ரூஷையில் ப்ரவணனையும், யௌ வனசாலியுமான கௌசிகனென்றொரு ப்ராஹ் மண ச்ரேஷ்டன் வேத வேதாந்த பாரங்கத னாய் விளங்காநின்றான். ப்ரஹ்மசர்யாச்ரமத் தில் மிகவும் ஆஸக்தியுடனிருந்த அவனுக்கு 'எண்ணாத் துயர் விளைக்கும் இவையென்ன உலகியற்கை' என்றும், 'தேன்பட்டவிடம் போலத் தித்திக்கின்ற சிறுபயனேயுறுபயனென் றழுந்துமாறும்' என்றும், 'தந்திரங்களளவில ராய் தனத்தான் மிக்க தார்வேந்தர் தொழ வைய மாண்டார் மாண்டார்' என்றுஞ் சொல்லுகிற படியே பிறப்பிறப்புப்பிணி முதலியவைகளால் துக்கமயமான இவ்வாழ்க்கையில் வெறுப்பு உண்டாகி ஸர்வ புண்யதீர்த்தங்களுக்குள்ளே ச்ரேஷ்டையான கங்கையில் நீராட இச்சை யுண்டாயிற்று. உத்தராபிமுகனாய் வெகு தூரம் போக நினைத்துத் தன்னுடைய க்ரு ஹத்தினின்றும் புறப்பட்டான். அநேக திவ்யதேசங்களிலும், புண்யதீர்த்தங்களிலும் பகவத்ஸேவையையும், ஸ்நாநங்களையும் செய்து கொண்டு பல நாட்களுக்குப் பிறகு தண்டகா ரண்யத்தின் மத்யப்ரதேசத்தை அடைந் தான். அப்பொழுது ஸூர்யாஸ்தமனமாகி விட்டது. வெகு நாட்களாக ஸரியான ஆஹா ரமின்மையாலும், வழிநடையாலும் உண்டான ச்ரமத்தினால் பீடிக்கப்பட்ட அவன் மஹா பயங்கரமான அவ்வனத்தில் கொடிய விலங்கு களினின்றும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள நினைத்து ஓர் புதரின் மறைவில் படுத்துறங்கி னான். மறுநாள் ஸூர்யன் உதித்தவாறே எழுந்த அவன் மிகவும் ஆயாஸமுள்ளவனாய் உட்கார்ந்திருக்கும்பொழுது ஓர் சண்டாளன் அவ்வழி போவதைக் கண்ணுற்றான். பசியி னால் கண்ணிருண்டிருந்த ப்ராஹ்மணன், ஒரு வனைப் பலபேர்களாகவும், சண்டாளனை மஹா புருஷனாகவும் நினைத்து அவனைக் கூப்பிட்டுத் தனக்கு உணவு அளிக்குமாறு வேண்டிக்கொண் டான். அச்சண்டாளனும் இப்ராஹ்மணனு டைய தேஜஸ்ஸைக் கண்டு இவனைத் தன் தோளில் ஏற்றிவைத்துக்கொண்டு தன்வீட்டை யடைந்தான். அங்கு அவனுக்கு அறுசுவை யுண்டி யளித்து உண்ணச்செய்தான். ப்ராஹ் மணனும் பசிமேலீட்டால் நன்றாக உண வருந்தி நித்ரை செய்தான். அப்பொழுது அச்சண்டாளன் தன் பெண்ணை அழைத்து நீ சென்று அவ்வந்தணனுடைய களை தீர பரி சரணம் செய் என்று ஆஜ்ஞாபித்தான். அவ ளும் நித்ரையில் ஆழ்ந்த அந்த ப்ராஹ்மணனு டைய காசரணாதிகளை நோவுதீரப் பிடித்து சுச்ரூஷை செய்தாள். துயிலினின்றும் விடு பட்டவாறே ப்ராஹ்மணன் அந்நங்கையின் அழகி லீடுபட்டு தன்வசமிழந்து அவளைக்கூடிக் கலவி தான் வந்த கார்யத்தை மறந்து அவளுடன் வாழ்க்கை நடத்த வாரம்பித்தான்.

(தொடரும்)

ஸ்ரீ:

செய்தி

7-8-57ஸாயங்காலம் 6-30மணிக்கு ராஷ்ட்ரபதி கனம் ஸ்ரீ பாபுராஜேந்த்ரப்ரஸாத்ஹைத ராபாத் அலவால் என்றவிடத்தில் உள்ள கோவிலுக்குச் சென்று ஸ்வாமி தரிசனம் செய்தார். (இந்தக் கோவிலில் உள்ள மூர்த்திகளின் பிம்பங்கள் ஸ்ரீமதஹோபிலமடத்து ஸ்ரீ அழகியசிங்கரால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டன என்பது கவனிக்கத்தக்கது.) இதுஸமயம் ஸ்ரீமதழகியசிங்கரின் நியமனத்தின் பேரில், ஸ்ரீஅஹோபிலமடத்தின் சார்பில் ஹைதராபாத்தில் ஸ்ரீ அஹோபிலமடத்தின் ஸ்ரீகார்யகர்த்தாவும், ஏஜண்டும் ஆன சில்கூர், ஸ்ரீ. உப. மா. வெங்கட்ராகவாசாரியர் ஸ்வாமி கீழ்க்கண்ட ஸ்வாகதபத்ரிகையை ஸமர்ப்பித்தார். ராஷ்ட்ரபதியும் ப்ரீதியுடன் அதை ஏற்றுக்கொண்டார்.

॥ श्रीनिवासपरब्रह्मणे नमः । श्री लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः ॥

अखिलमहीमण्डलमण्डनायमानानां, श्रीमद्भरतखण्डसार्वभौमानां, आन्ध्र, द्रामिड, कर्णाटादिप्रदेशजनतायोगक्षेमसमुन्नतये संचरतामासेतुशीताचलं, राष्ट्रपत्यादिबिरुदावळिभिस्समलंकृतानां श्री राजेन्द्रप्रसाद्महाशयानां,

अयि! अभिज्ञाशिखामणे! तत्र भवान् स्वाराज्यप्राप्तये 'अनुभवति हि मूर्ध्ना पादपस्तीव्रमुष्णं' इत्युक्तिमनुसृत्य महान्तं क्लेशमप्यगणयन् महात्मनः श्रीमतो गान्धिमहाशयस्य सम्मतिमनुसरन् भूत्वातिवेलं तद्विश्वासपात्रं तेनैव प्रजापालनकर्मण्यभिषिक्तः, धर्मेण राज्यमिदं पालयन् भगवति भक्तिमाचरन्, श्री सोमनाथादि देवतायतनान्युद्धरन्, हिन्दूधर्मे बद्धश्रद्धः हस्तिनपुराख्ये डिल्ली नगरे विद्योतते । इदानीं आन्ध्रराष्ट्रीय प्रजाभागधेयभूम्ना भाग्यपुरीमिमामलंकृत्य अलवाल ग्रामे भक्तजनसौकर्यार्थं श्रीमदहोबिलमठाधीश्वरप्रतिष्ठापितस्य श्री श्रीनिवासस्य, दर्शनव्याजेन अत्रत्यानां जनानां दर्शनं दातुं ग्राममिममलमकरोत् । सर्वभाषाजननीं गैर्वाणीं वाणीं उज्जिजीवयिषुं बद्धदीक्षस्तत्रभवान् एवमेव धर्मरक्षणरतः नीरोगः निगमप्रोक्तं दीर्घमायुरवाप्य सदारपुत्रपौत्रः राष्ट्रपतित्वस्थानेस्मिन्नेव जेजीयतामाचन्द्रमातारकं इति श्रीमदहोबिलपीठाधिपस्य श्रीमद्वेदमार्गेत्यादि बिरुदावळीविराजितस्य श्रीवण्शठकोप श्रीवीरराघवशठकोपयतीन्द्रमहादेशिकस्याज्ञां शिरसा वहन् भगवन्तं भक्तवत्सलं प्रार्थये ॥

जयतु जयतु पुण्यं भारतं खण्डमेतत् जयतु जयतु भूमौ जीवितं सज्जनानां
जयतु जयतु नित्यञ्चान्ध्रराष्ट्रं वरेण्यं जयतु जयतु राजेन्द्रप्रसादो जगत्याम् ॥

इति निवेदकः

सज्जनचरणारविन्दस्यन्दमानामन्दमकरन्दसन्दोहेन्दिन्दिरः
विद्याभूषणं, चीलुक्कूर्, मा. वेङ्कटराघवाचार्यः शिरोमणिः
भाग्यपुरे श्रीमदहोबिलपीठाधीश प्रतिनिधिः

अलवालग्रामः
हेमलम्बि नाम संवत्सर
श्रावण शुक्लद्वादशी

210742

ஸ்ரீ:

காஞ்சீபுரத்தில் எங்கள் சொந்த தறியில் தயார் செய்யும் பட்டு சேலைகள்

காஞ்சீபுரம் விலைக்கே சேலத்தில் கொடுக்கப்படும்

கல்யாணகாலத்தை முன்னிட்டு

காஞ்சீபுரம், கொள்ளேகாலம், தருமாவரம், ஆரணி,

பட்டு சேலைகள், கண்ணைக் கவரும் சிறந்த

நாகரீகமான பார்டர்கள் 6 கெ,

8 கெ, 9 கெ, 9½ கெஜம்

சேலைகள் ஏராளமாக ஸ்டாக்

செய்திருக்கிறோம்

வெண்பட்டு 10X6, நூல் கோர்வை,

சரிகைபேட் 10X6, 8X8, 9X9,

ஜோடிகளும் மிகவும் மலிவான

விலையில் கிடைக்கும்

எங்கள் கடைக்கு நேரில்

விஜயம் செய்து ஜவுளிகள்

வாங்கி திருப்தியடையக்

கோருகிறோம்.

காஞ்சீபுரம் ஜவுளிக்கடை

கந்த விலாஸ்

போன் நெ.

123.

அ. கந்தசாமி முதலியார்

& சன்ஸ்

கடை வீதி: சேலம் 1.

உரிமையாளர்:-

அ. க. தங்கவேல் முதலியார்.

ஹெட் ஆபீஸ்:- காந்திரோடு, காஞ்சீபுரம். போன்: 12.

பிராஞ்சுகள்:-	போன்: 71557,	போன்: 121,	போன்: 123,
213, தங்கசாலை தெரு	மைலாப்பூர்	கீழ் ரதவீதி	கடை வீதி
மதராஸ்-1.	மதராஸ்-4.	திருநெல்வேலி	சேலம்-1.

மேட்டூர், பென்னி மில் ஜவுளிகளும் கிடைக்கும்.

ஸ்ரீ:

பஞ்சாங்கஸங்க்ரஹம்

[ஹேமலம்பி௵ தக்ஷிணாயநம் - வர்ஷருது, ஸிம்ஹ௴ 1957 ௵ ஆகஸ்ட் - செப்டம்பர்]

17-8-57	ஆவணி௴ 1௳	சனிக்கிழமை	ஸிம்ஹக்ருஷ்ணஸப்தமி திதி.
18-8-57	2௳	ஞாயிற்றுக்கிழமை	வைகாநஸ ஸ்ரீஜயந்தி.
20-8-57	4௳	செவ்வாய்க்கிழமை	முநித்ரய, ஸ்ரீபாஞ்சராத்ர, ஸ்ரீஜயந்தி.
21-8-57	5௳	புதன்கிழமை	ஏகாதசி.
22-8-57	6௳	வியாழக்கிழமை	த்வாதசி, ஹரிவாஸரம் 4-52.
24-8-57	8௳	சனிக்கிழமை	போதாயன அமாவாஸ்யை.
25-8-57	9௳	ஞாயிற்றுக்கிழமை	● அமாவாஸ்யை,
26-8-57	10௳	திங்கட்கிழமை	ப்ரதமை, த்விதீயை திதித்வயம்.
27-8-57	11௳	செவ்வாய்க்கிழமை	த்ருதீயை திதி.
28-8-57	12௳	புதன்கிழமை	சதுர்த்திதிதி ஸாம உபாகர்மா.
2-9-57	17௳	திங்கட்கிழமை	கேட்டை. 2-வது பட்டம் ஸ்ரீமந்நாராயண யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
3-9-57	18௳	செவ்வாய்க்கிழமை	மூலம், 28-வது பட்டம் ஸ்ரீரங்கநாத சடகோப யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
4-9-57	19௳	புதன்கிழமை	பரிவர்த்தன ஏகாதசி.
5-9-57	20௳	வியாழக்கிழமை	த்வாதசி, ஹரிவாஸரம், 11-6.
8-9-57	23௳	ஞாயிற்றுக்கிழமை	○ பூர்ணிமை.
9-9-57	24௳	திங்கட்கிழமை	மஹாளயாரம்பம்,
10-9-57	25௳	செவ்வாய்க்கிழமை	த்விதீயை திதி.
11-9-57	26௳	புதன்கிழமை	அதிதி.
12-9-57	27௳	வியாழக்கிழமை	த்ருதீயை திதி.
14-9-57	29௳	சனிக்கிழமை	மஹாபரணி.
16-9-57	31௳	திங்கட்கிழமை	ஷடசீதி, ஸங்க்ரமண தர்ப்பணம், சூன்யதிதி,

[தக்ஷிணாயநம் - வர்ஷருது, கந்யா ௴]

17-9-57	புரட்டாசி௴ 1௳	செவ்வாய்க்கிழமை	சூன்ய திதி, மத்யாஷ்டமி வ்யதீபாதம்
18-9-57	2௳	புதன்கிழமை	நவமி, தசமி திதித்வயம்.
19-9-57	3௳	வியாழக்கிழமை	ஏகாதசி திதி.
20-9-57	4௳	வெள்ளிக்கிழமை	ஏகாதசி வ்ரதம், ஸந்யஸ்தமஹாளயம்.
21-9-57	5௳	சனிக்கிழமை	ஆயில்யம், 18-வது பட்டம் ஸ்ரீமந்நாராயண யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
22-9-57	6௳	ஞாயிற்றுக்கிழமை	சஸ்த்ரஹதமஹாளயம், பூரம், 12-வது பட்டம் ஸ்ரீமந்நாராயணயதீந்த்ரமஹாதேசிகன் திரு
23-9-57	7௳	திங்கட்கிழமை	● மஹாளய அமாவாஸ்யை, [நக்ஷத்ரம்.
24-9-57	8௳	செவ்வாய்க்கிழமை	நவராத்ரி ஆரம்பம்.
27-9-57	11௳	வெள்ளிக்கிழமை	விசாகம், 33-வது பட்டம் ஸ்ரீசடகோபயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
29-9-57	13௳	ஞாயிற்றுக்கிழமை	திருக்கேட்டை, ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்திரம்.
30-9-57	14௳	திங்கட்கிழமை	மூலம், 20-வது பட்டம் ஸ்ரீ வீரராகவ யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.

குறிப்பு:- 4-9-57 (ஆவணி௴ 19௳) பரிவர்த்தன ஏகாதசி வ்ரதாநுஷ்டாநம் இன்றுதான். தசமி வேதையில்லை. ஆவணி௴ 20௳ வைஷ்ணவ ஏகாதசி என்று சில பஞ்சாங்கங்களில் காணப்படுவது ஸரியல்ல.

Regd. No. M. 4437.

போன் நெ. 112.

காஞ்சீபுரத்தில் கலியாண பட்டு ஜவுளிகள்

வாங்க நம்பிக்கையான இடம்

புதிய ஜவுளிக்கடை

***

ஸ்ரீ லக்ஷ்மி விலாஸ்

A. விசுவநாத முதலியார் & சன்,

184. காந்தி ரோடு, காஞ்சீபுரம்.

இந்தியன் பாங்க், லிமிடெட்

(ஸ்தாபிதம் : 1907.)

தலைமை ஆபீஸ் : "இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்", வடக்கு பீச் ரோடு,

மதராஸ்-1.

தென் இந்தியாவில் முழுவதிலும், பம்பாய், கல்கத்தா, புது டில்லி, கொழும்பு, சிங்கப்பூர், F.M.S. முதலிய இடங்களில் கிளை ஆபீஸ்கள் இருக்கின்றன.

மூலதனம்

அங்கீகரிக்கப்பட்டது	...	ரூ.	1,00,00,000
வழங்கப்பட்டது	...	ரூ.	72,00,000
செலுத்தப்பட்டது	...	ரூ.	63,83,130
ரிசர்வ் & இதர நிதிகள்	...	ரூ.	79,75,000
டெபாஸிட்டுகள் (31–12–56-ல்)	...	ரூ.	32·56 கோடிகள்

எல்லாவிதமான பாங்கிங் அலுவல்களும் கவனிக்கப்படும்.

D. P. பார்த்தசாரதி, B.A. (Hons), B.L., செக்ரெட்டரி.